உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி உஉ.] ரக்தாக்ஷி௵ சித்திரைமீ [பகுதி ௬.
Vol. XXII. April-May-1924. No. 6.

அநுதாபக்குறிப்பு.

ஆண்டிப்பட்டிஜமீந்தாரும், மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் உபாக்கிராஸநாதிபதியுமான ராவ்பஹாதூர் சா. ராம. மு. சித. பெத்தாச்சி செட்டியார் அவர்கள் நளிது சித்திரை மீ க அ௳ (30-4-24) காலம் சென்றது மதுரைத்தமிழ்ச்சங்கத்துக்கும், தமிழ்ப்புலவர்களுக்கும், தமிழ்நாட்டிற்கும் மிக்க பரிதாபகரமாயுள்ளது. இவர் தன்சிறுபிராயந் தொடங்கித் தமிழ்ச்சங்கத்தில் அபிமானமிக்கவராய் முதற்றடவையில் 1000 ரூபா நன்கொடையாயும், மாதந்தோறும் 50 ரூபா ஊட்டுப் பொருளாயும் உதவித் தமிழ்ச்சங்கத்தை ஆதரித்து வந்ததுடன் சங்க மண்டபம் வாங்கியதற்கு ரூபா 5000-மும் உபகரித்தார். இம்மட்டிலன்றி இன்னும் சங்கத்துக்குப் பலவிதஉதவிபுரிந்து 1,00,000 ரூபா வரை மூலதனம் சேர்த்துவைக்கவும் எண்ணங்கொண்டிருந்தார். இவர் செல்வப்பெருக்கத்துக்கேற்ப இப்படிப்பட்ட பொதுநன்மைகளில் இவர் செய்தும், செய்யக்கருதியுமுள்ள பேருதவிகளும் மிகப் பலவாம். இவரது ஒப்புரவாண்மை,

"ஊருணிநீர்நிறைந்தற்றேயுலகவாம்
பேரறிவாளன்திரு"

"பயன்மரமுள்ளூர்ப்பழுத்தற்றாற்செல்வம்
நயனுடையான்கட்படின்"

என்னும் பொய்யாமொழிக்கிலக்கியமாயுள்ளது. இன்னும் இவரது குணவிசேடங்கள் பலவும் அடுத்துவரும் இரங்கற்பாக்களால் விளங்கும். கொடையொளிகொண்டு குலம்விளக்கிநின்ற இவரது அகாலமரணத்தை நினைந்து வருந்தும் இவர்குடும்பத்தார்க்கு நம்மனப்பூர்வமான அநுதாபத்தைத் தெரிவிக்கிறோம்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் உபஅக்கிராசனாதிபதியும்
ஆண்டிபட்டி ஜமீந்தாருமான திவான்பகதூர்

சா. ராம, மு. சித.

பெத்தாச்சி செட்டியாரவர்களின்

பிரிவாற்றாமையால் தமிழ்ச்சங்கக்கலாசாலையுபாத்தியாயர்
சு. நல்லசிவன்பிள்ளையவர்கள் பாடிய இரங்கற்பா.

கலிவெண்பா.

தேங்கமழும் பூம்பொழிலுஞ் செந்தாமரைத்தடமும்
பாக்கரெலாந் தட்டம் பயப்பனவாய்—ஓங்குறுசீர்க்
கானாடு காத்தானிற் கற்பகமே போன்றுதித்து
வானாடும் போற்றுமுயர் வள்ளலே—மானாடுங்
கையான் பசுபதியான் கண்ணுதலான் கான்மலரின்
மெய்யான பத்தி மிகுந்தோனே—பொய்யாத
வாசகனே பெத்தாச்சி மன்னு மகிதலத்தில்
ஆசகன்ற சிந்தை யறவோனே—தேசுயர்ந்த
ஆண்டிபட்டி வேந்தே யருளாளா வார்வமுடன்
வேண்டியுற்றோர் வெம்மிடிக்கு மேவலனே—பாண்டியர்போல்
நந்தமிழை யாதரித்த நல்லோனே யெம்மைவிட்டங்
கெந்த வுலகத்திற் கேகினைநீ—சிந்தையுடன்
மண்ணிற் புலவர் வறுமை தவிர்த்தோமேல்
விண்ணிற் புலவர் மிடிதவிர்ப்போம்—எண்ணில்
அறம்போன்ற தில்லையென வாய்ந்தோவிந் நாளின்
மறந்தேய வான்புகுந்தாய் வையக்—துறந்தேநீ
பொய்வாழ்க்கை யிந்தப் புவிவாழ்க்கை யென்றுணர்ந்தோ
மெய்வாழ்க்கை வீடு விழைந்தனையாங்—கையா
வுனைப்பிரிந்து ஞால முறுதுயரந் தன்னை
யினைத்தெனவிங் காரே யிசைப்பார்—நினைத்துனையாக்

கொண்டுயிர் வாழ்ந்த குடும்பமெலாம் வெந்துயரான்
மண்டெரியி லுற்றாற்போன் மாழ்கினவே—தண்டமிழ்நூற்
பாவலரைக் கண்டாற் பரிதிகண்ட பங்கயம்போல்
ஆவலுடன் செம்பொ னளிப்போனே—காவலனே
சாற்று மதுரைத் தமிழ்ச்சங்கத் திற்குலகம்
போற்றுந் துணைத்தலைமை பூண்டோனே—மாற்றுயர்ந்த
பொன்னே மணியே புலவர்மிடிக் கோர்மருந்தே
தன்னேரிலாத தயாநிதியே—பன்னாளுஞ்
செய்யாளும் பாரதியுஞ் சேர்ந்திருக்கச் சங்கத்திற்
கையா யிரம்பொ னளித்தனையே—செய்யாமற்
செய்த வுதவி சிறிதலவே திங்கடொறு
மைதவிர்பொ னைம்பான் வழங்கினையே—பைதலின்றி
மாணவர்கள் கற்கும் வகைக்கோர் தசம்பொன்னுங்
காணுமதி தோறுநல்கிக் காத்தனையே—பேணு
நிதிசேர் சிரபுரத்து நேஷனற்கல் லூரி
துதிசேரக் கல்வி துலங்க—வதிரேக
வெண்பொனைம்ப தாயிரமு மேன்மைமிகு சென்னையினிற்
பண்புதிகழ் கோஷாவாஸ் பத்திரிக்கு—நண்புடனே
வோரிருப தாயிரமு மோங்குமயிலையினிற்
சீராமக்ருஷ்ணமடம் சீராரும்—பேர்விடுதிச்
சாலைக்கைம் மூன்று சததசமுந் தையலர்தஞ்
சூலைப் பிரசவிக்குந் தூய்விடுதிக்—கேலவே
நாலாயிரம்பொன்னு நல்கினையே யின்னவெலா
மேலாத் தெரிந்த வியன்கொடையே—நூலாயும்
விற்பனர்க்கு மாதுலர்க்கும் வேண்டினர்க்கும் வேண்டார்க்கும்
பற்பலர்க்கு மீந்த பரிசிலதுஞ்—சொற்பமதோ
இப்பே ருபகார மேய்ந்த வுனையிழந்த
திப்பே ருலக மியற்றியதோர்—செப்பரிய
பாவமே யென்று பகர்வதன்றி மற்றுமுண்டோ
கூவமே போன்றுதவுங் கோமானே—பூவுலகில்

ஏரார் திவான்பகதூரென்னு முயர்பட்டம்
போரார்நம் வேந்துதரப் பெற்றோனே—சீரார்ந்த

நன்னாட்டுக் கோட்டை நகரத்தார் தம்மாபின்
முன்னாட்டு கீர்த்தி முதிர்ந்தோனே—யெந்நாட்டுந்

தன்பேர் விளங்கத் தருமமே யோருருவா
யன்பார்ந்து வந்ததெனு மண்ணாலே—யின்பார்ந்த

சீரகத் தாரோனே சீமானே நின்பிரிவா
லாரகத் துன்ப மடையாதார்—பாரகன்று

மன்னுமிரத் தாட்சி வருடம் வருடைமதி
துன்னபர பக்கத் துவாதசிசேர்—பன்னு

மதிமகன்றன் வாரமோ வள்ளானீ வானிற்
கதியடைந்த நாளினியெக்காலுன்—அதிமதுர

வாக்கும் மலர்முகமும் வானோர் திருக்காமும்
நோக்கிக் களிப்பேம் நவலுவாய்—ஆக்குமயன்

நன்றூர்ந்த செல்வமெலா நல்கியுயிர் வாழ்நாளை
யன்றோ குறைத்தா னருளில்லான்—நின்றே

வயம்புனையுந் தெய்வ வலியதனை மாற்றிச்
சயம்புனைவாரில்லை சகத்தென்—றியம்பினநூல்

என்னே புரிவ மிவண்போன் றவணுநல
மன்னே புரிக மகிழ்ந்து.

உ

ஆண்டிபட்டி ஜமீன் ஆஸ்தான பண்டிதர்
ஸ்ரீமத். வி திருஞானசம்பந்தக் கவிராயரவர்களாலியற்றிய
இரங்கற்பாக்கள்.

1. பெத்தாச்சிமன்னனெனத்தனவசியர்பெருங்குடியிற்
பிறந்தகோவே
பத்தாய்ச்சியொன்றினுமுன் அன்புடைமைக்குவமைசொலப்
படுவார்கொல்லோ
சித்தாட்சிபெறுவிருப்பம் அனுதினமுமெனக்குரைக்குந்
திருநின்பேர்க்கு
ரத்தாக்ஷியோடுசேரியெதுகையெனமுடிந்ததுவோ
ரசிகர்வாழ்வே.

2. முப்பதிற்றுமுக்கோடியிம்பருக்கும்உம்பருக்கும்
முறையேவேண்டும்
எப்பெரியநலமெனினுந்துணைபுரிந்துநிறைவேற்றற்
கியைந்தசிந்தைக்
கொப்புயர்வில்லாமைகண்டகண்மணியேபெத்தாச்சி
யுனையான்கண்ட
அப்புதியதினமுதலாயெனைமறந்தேன்என்மறந்தா
யெனைநீயையா.

3. புண்ணியமேயுருவெடுத்துப்பூதலத்தின்முளைத்தனைய
புனிதவள்ளால்
எண்ணியஎண்ணியவாங்கேதமிழ்ப்புலவர்தனம்படைத்தற்
கெளிதேயென்றன்
திண்ணைதலிற்றினங்கூடிநினைப்பாடற்கெணக்காணச்
செய்துசிர்த்தி
நண்ணியவைத்துயர்த்தினையேபெத்தாச்சிபிரிந்ததென்னீ
நவிலுவாயே.

4. நின்னரியசரித்திரத்தைநிலவுலகங்காண்பதுவே
நீதியேனும்
உன்னரியகொடைத்திறமிக்கொப்புயர்வற்றொளிர்வதுனக்
குணர்த்தத்தானே
பன்னகமாம்பணிபணிந்தோன்உன்னைநிரேயெழுதுவித்துப்
படித்துக்காட்டற்
குன்னியதெம்பெத்தாச்சியுத்தமனேபத்தர்பர
வுசித்வாழ்வே.

5. இன்றுவரையுளபுலவர்யாவருமுன்றனைப்பாடி
யிந்தநூல்கள்
ஒன்றுமுறைபிறழாமல்அச்சிலிட்டுப்புத்தகமா
யுதவுவாயேல்
நன்றிபிதன்பொருட்டாகஇருபதிற்றையாயிரம்பொன்
நல்குவேன்யான்
என்றுரைத்தாய்பெத்தாச்சியான்புரிந்தேன்நீபுரிவ
தியம்புவாயே.

6. எத்தனையோ தவத்துறையுள் எத்தனையோ மதிப்பெருநா
விலங்குகோட்டம்
எத்தனையோ கல்லூரி எத்தனையோ தமிழ்க்கழகம்
இனியோர்கூட்டம்.
எத்தனையோ சங்கீதமுத்தய பாகவதர்வழி
யிசைசால்சூழல்
அத்தனையும்பெத்தாச்சிநீமறப்பதெங்ஙனம்யா
னறிகிலேனே.

7. சட்டசபைதனக்கொருவன் தமிழ்ச்சங்கந்தனக்கடுத்த
தலைவன் தர்மப்
பெட்புறுஜில்லாப்போர்டுமுனிசிபல்சங்கங்களிலும்
பிறங்குதோன்றல்
நட்புறுதேவஸ்தானக்கமிட்டியெம்பெத்தாச்சிபொது
நலந்தேர்வேந்தாம்
பட்டமுடன் திவான்பகதூர்ப்பட்டமும்நீத்தேகியதேன்
பகர்ந்திடாயே.

8. மன்மதனும்பெண்விரும்பவடிவழகுபடைத்துவந்த
வணிகர்கோவே
நன்மதுரைத்தமிழ்ச்சங்கம்நவில்கரந்தைத்தமிழ்ச்சங்கம்
நயந்துபோற்றத்
தன்மதுரைப்பெத்தாச்சிதமிழ்வள்ளலெனப்புகலுந்
தரந்தேர்ந்தாங்கே
பொன்மலிவிட்புலவர்சங்கம்புரக்கவும்நீநினைத்தனையோ
புனிதவேளே.

9. தருணமணிப்பணிபணியெம்பெத்தாச்சியெனும்புனிதன்
தருமமார்க்கம்
மரணமதுமருவாமல்வளர் தருசஞ்சீவியெனு
மருமந்தேர்ந்தும்
பருணிதர்க்குமாறுகிவேரோடுபறித்தயின்ற
பகடேர்கூற்றைத்
தாணிதனிற்புலவரென்பீரெழுந்தருள்வீரம்பாடிச்
சபிக்கத் தானே.

காலவளவைக்கவி.

ரத்தாக்ஷிச் சித்திரைப்பூ ரட்டாதிப் புந்தியென்பார்
பெத்தாச்சிச் சித்தனெனும் பேர்க்குரிய——முத்தனென்று
பத்தர்பணிதூயோன் துவாதசியிற் பைங்கருவூர்ச்
சித்தர்தம்பாற் சேர்ந்த தினம்.

உ

இவை, கரந்தைத்தமிழ்ச்சங்கத்தார் **6-5-24**-ல் கூடிய இரங்கற்கூட்டத்திற் படிக்கப்பெற்றவை.

க. என்செய்வோம்! பெத்தாச்சி! இறந்தனையோ? தமிழர்யாம்
முன்செய்த தீவினையோ? முதுதமிழ்செய் தீவினையோ?
நன்மைசெய் தனவணிகர் நாயகனே! உனை அந்தோ!
வன்மைசெய் கூற்றுவன்றான் கொன்றனனே! வாழ்வானே?

உ. பொதுப்பணிகள் புரிவதுவே புனைகலனாப் பூண்டிருந்தோய்!
மதிப்புடைய மக்களுக்குள் மணிவிளக்காய் மன்னினையே!
துதித்தடையும் வறியோர்கள் துயரகற்றும் தண்கொடையாய்!
சதிக்கூற்றம் உனைக்கொண்டு சார்ந்ததுவும் அறமேயோ?

ஙு. மெய்யாரும் மதியுடையாய்! மேன்மைநிறை குணம்உடையாய்!
துய்யாரும் நடைஉடையாய்! துணைவர்பலர் குழுஉடையாய்!
பையாரும் அரவுடையான் பதமலர்க்குப் பணிவுடையாய்!
ஐயா! எம் பெத்தாச்சி! அண்ணல்! நீ! அகன்றனையோ?

ச. வள்ளல்பலர் தமிழகத்தே வதிந்திருந்தார் எனக்கேட்டேம்
உள்ளுபுகழ் உடல்நிறுத்த உனையன்றிக் கண்டறியேம்
கள்ளமிலா மனம்உடையாய்! கருணைநிறை முகம்உடையாய்!
ஒள்ளியனே! ஒளித்தனையோ? பெத்தாச்சி! உத்தமனே!

ரு. தங்குபுகழ்த் தமிழ்த்தொண்டே தளராது செய்துறையும்
எங்காந்தைத் தமிழ்ச்சங்கப் புரவலனு யினிதிருந்தே
மங்காமற் பொருளளித்தாய்! சுவடிபல மகிழ்ந்தளித்தாய்!
இங்குறைந்து தமிழ் வளர்க்கப் புலவரையும் ஈந்தனையே!

சு. தமிழ்வள்ளல் எனும்பெயர்க்குத் தகுதியுள பெருவாழ்வே!
தமிழ்ப்புலவர் தமையெல்லாம் புரந்தளித்தோய்! தருவனையாய்!
தமிழ்ச்சங்கம் பலவற்றைத் தளராது வளர்த்தவனே!
தமிழ்த்தாயின் தலைமகனே! தாணியைவிட் டேகினையோ?

எ. தமிழ்ப்புலவர் அழுதிரங்கத் தமிழ்மகளும் அழுதிரங்கத்
தமிழ்த்தொண்டர் அழுதிரங்கத் தமிழ்த்தாள்கள் அழுதிரங்கத்
தமிழ் கற்போர் அழுதிரங்கத் தமிழ்நாடே அழுதிரங்கத்
தமிழ் வள்ளல்! சென்றனையோ? பெத்தாச்சித்! தீர்தாவே!

அ. ஆக்கைநிலை யாமைதனை அறிந்து வைத்தே அறங்கள்பல
ஊக்கமுடன் உஞற்றினையோ? உறுகருணைப் பெத்தாச்சி!
வாக்கினிய வளம்உடையாய்! வண்மையிலா மக்களுக்கோர்
போக்கறிவித் தகன்றனையோ? புண்ணியமார் புரவலனே!

கூ. இவ்வுலகில் அறங்களெலாம் இயற்றினேம் இனியந்தச்
செவ்விதிகழ் பொன்னுலகிற் செய்வமெனச் சென்றனையோ?
கொவ்வைஇதழ் உமைபாகன் கொழுஞ் செல்வத் தனதனேடும்
ஒளவியமில் நின்னினிய கேண்மைகொள அழைத்தனனே?

ய. பொல்லாத இரத்தாட்சிப் புலையாண்டுச் சித்திரையே!
பல்லாரும் பழிக்கவரு பதினெட்டாம் நாள்புதனே!
கல்லாரும் அழுதாற்றப் பெத்தாச்சிக் காவலனை
அல்லாரும் கண்டத்தான் அடியகத்தே சேர்த்தனரோ.

*விஞ்ஞானதீபம்.

[உக-ஆம் தொகுதியின் கஉருகூ-ஆம் பக்கத்தொடர்ச்சி.]

பூதோற்பத்தி.

24. முன்னர்க்கூறிய "சூரியசந்திரோற்பத்தி," "மலைகடலுற்பத்தி" என்னும் இரண்டு அதிகாரங்களுக்கும் மேல்வரும் "தாவரசங்கமோற்பத்தி," "மானிடசரீரோற்பத்தி" என்னும் இரண்டு அதிகாரங்களுக்கும் பொதுவாகிய சில பொருண்முடிபுகளை அரிமாநோக்காக இடைநிறுத்திப் "பூதோற்பத்தி" எனப் பெயர் தந்து ஒரு தனியதிகாரமாக முடிக்கக்கருதினும்.

"நிலந்தீ நீர்வளி விசும்போ டைந்துங்
கலந்த மயக்க முலகம்,"

என ஆசிரியர் தொல்காப்பியனார் உரைத்த நுண்பொருளைநோக்குமிடத்து ஐம்பெரும்பூதத்தின் இயல்பினையறிந்தோர் அவற்றாலாகிய அகிலத்தினது அமைப்பையறிதல் எளிது என்பது பெறப்படுகின்றது.

25. ஐம்பெரும்பூதங்களின் உற்பத்திவான்முறையை யாராயப்புகுமிடத்து முதலில் நமது தத்துவ சாஸ்திரநூல்களிற் கூறியிருக்கிற வான்முறையை யுரைத்து அப்பால் மேலைத்தேச விஞ்ஞானநூல்களிற் கூறியிருக்கிற வான்முறையை யுரைத்தல் மரபாகும். பழைமைவாய்ந்த சாங்கிய தரிசனத்திற் சொல்லப்பட்டிருக்குங் கொள்கையினை முதற்கண் எடுத்துக்கொள்வாம்.

---

* விஞ்ஞானதீபம் மேற்றிசைச்செல்வம். என்னும் இருஉரைத்தொடரையும் எழுதிவரும் ஆசிரியரது புதிய ஆச்சிரமப்பெயர் சுவாமி விபுலானந்தர் என்பது. இப்பெயரே இவர்க்கு இனிமேல் என்றும் வழங்குதற்குரியது. பூர்வாச்சிரமப்பெயரும்; கல்விக்கழகத்தார் கொடுத்த சிறப்புப்பெயர்களுஞ் சேர்ந்த பண்டித மயில்வாகனனார் B. Sc. (Lond) என்னும் பெயரும் அறிவுநூல் கற்கப்புகுந்தஞான்று குரவரளித்த பிரபோதசைதந்யர் என்னும் பெயரும் இனிவழங்குதற்குரியனவல்ல.

ஸத்த்வரஜஸ்தமஸாம் ஸாம்யாவஸ்தா ப்ரக்ருதி꞉। ப்ரக்ருதேர்மஹாந்
மஹதோऽஹங்காரோऽஹங்காராத் பஞ்ச தந்மாத்ராண்யுபயமிந்த்ரியம்
தந்மாத்ரேப்ய꞉ ஸ்தூலபூதாநி। புருஷ இதி பஞ்சவிம்ஶதிர்க
ண꞉ ॥ சாங்கியசூத்திரம் I, 61.

இதுசாங் கியமத மென்றெடுத் துரைப்போன்
தனையறி வரிதாய்த் தான்முக் குணமாய்
மனநிகழ் வின்றி மாண்பமை பொதுவா
யெல்லாப் பொருளுந் தோன்றுதற் கிடமெனச்
சொல்லுதன் மூலப் பகுதிசித் தத்து
மானென் றுரைத்த புத்தி வெளிப்பட்
டதன்க ணாகாயம் வெளிப்பட் டதன்கண்
வாயு வெளிப்பட் டதன்க ணங்கி
யானது வெளிப்பட் டதன்க ணப்பின்
றன்மை வெளிப்பட் டதின்மண் வெளிப்பட்
டவற்றின் கூட்டத் தின்மனம் வெளிப்பட்
டார்ப்புறு மனத்தாங் காரவி காரமும்
ஆகா யத்திற் செவியொலி விகாரமும்
வாயுவிற் றுக்கு மூறெனும் விகாரமும்
அங்கியிற் கண்ணு மொளியுமாம் விகார மும்
தங்கிய வப்பில்வாய் சுவையெனும் விகாரமும்
நிலக்கண் மூக்கு நாற்ற விகாரமுஞ்
சொலப்பட் டிவற்றிற் றுக்கு விகாரமும்
வாக்குப் பாணி பாதபாயுரு பத்தமெனா
ஆக்கிய விவைவெளிப் பட்டிங் கறைந்த
பூத விகாரத் தான்மலை மரமுத
லோதிய வெளிப்பட் டுலகாய் நிகழ்ந்து
வந்த வழியே யிவைசென் றடங்கி
யந்தமில் பிரளய மாயிரு மளவு
மொன்று யெங்கும் பரந்து நித்தியமாம்
அறிதற் கெளிதாய் முக்குண மன்றிப்
பொறியுணர் விக்கும் பொதுவு மன்றி

எப்பொரு ளுந்தோன் றுதற்கிட மன்றி
அப்பொரு ளெல்லா மறிந்திடற் குணர்வாய்
ஒன்று மெங்கும் பரந்து நித் தியமாய்
நின்றுள வுணர்வாய் நிகழ்தரும் புருடன்
புலமார் பொருள்க ளிருபத் தைந்துள
நிலநீர் தீவளி யாகா யம்மே
மெய்வாய் கண்மூக் குச்செவி தாமே
உறுசுவை யொளியூ றோசைநாற் றம்மே
வாக்குப் பாத பாணி பாயு ருபத்த
மாக்கு மனேபுத்தி யாங்கார சித்தம்
உயிரெனு மான்மா வொன்றொடு மாமெனச்
செயிரறச் செப்பிய திறமுங் கேட்டு,"

(மணிமேகலை XXVII)

இங்ஙனம் கூறிய இருபத்தைந்து பொருள்களும் புருடன் (உயிர், ஆன்மா) பிரகிருதி (மூலப்பகுதி) என இரண்டாயடங்குவ; எஞ்சி நின்ற இருபத்துமூன்றும் பிரகிருதியில் அடங்குவவாகலின். "எல்லாப் பொருளுந் தோன்றுதற்கிடமெனச் சொல்லுதன் மூலப்பகுதி" என்புழிப் பிரகிருதியிலக்கணமும், "எப்பொருளுந் தோன்றுதற்கிடமன்றி அப்பொருளெல்லா மறிந்திடற்குணர்வாய், ஒன்று மெங்கும் பரந்து நித்தியமாய், நின்றுள வுணர்வாய் நிகழ்தரும் புருடன்" என்புழிப் புருடனிலக்கணமுங் கூறப்பட்டன. அறிவான் புருடன்; அறியப்படும் பொருளும் அறிவுவந்தெய்துங் கருவியும் பிரகிருதி. பிரகிருதி முதலாய் இருபத்துநான்கு தத்துவங்களையும் சைவசாத்தாகமங்கள் ஆன்ம தத்துவம் (அசுத்ததத்துவம்) எனக்கூறுவன. புருடதத்துவத்தையும் புருடனுக்குரிய பஞ்சகஞ்சுகங்களாகிய காலம், நியதி, கலை, வித்தை, அராகம் என்பவற்றையும் இவற்றுக்கு ஆதாரமாகிய மாயா தத்துவத்தையும் தொகுத்து வித்தியாதத்துவம் (அசுத்தாசுத்ததத்துவம்) எனக்கூறுவன; இவையனைத்துக்கும் ஆதாரமாகிய சுத்தவித்தியா தத்துவம், ஆங்கதற்கு ஆதாரமாகிய ஈசுரதத்துவம் (விந்துசத்தி), ஆங்கதற்கு ஆதாரமாகிய சாதாக்கியதத்துவம் (நாதசத்தி), ஆங்கதற்கு ஆதாரமாகிய சிவதத்துவம் சத்தி தத்துவம் என்னும் ஐந்தினை

யுந் தொகுத்துச் சிவதத்துவம் (சுத்ததத்துவம்) எனக்கூறுவன; பராசம்வித், நிஷ்களசிவம் எனப்படும். பிரமம் தத்துவாதீதமாய் ஒன்றாய்த் தத்துவம் முப்பத்தாறினுக்கும் ஆதாரமாய் அவற்றின் வேறாய் நிற்கும் என்பது சைவசாக்தநூன்முடிபு. பிரகிருதி முதலயா இருபத்துநான்குதத்துவங்களையும் பற்றிய ஆராய்ச்சி சைவசாக்த வைஷ்ணவசித்தாந்தங்களுக்கும் சங்கரபாடியத்துக்கும் சாங்கியநூலுக்கும் ஒப்பமுடிந்ததாகலின் பழைமைபொருந்திய சாங்கியநூலே ஏனைய தத்துவஆராய்ச்சிகளுக்கெல்லாம் முதனூலாய்நின்றதென்பது மறுக்கொணா உண்மையாகின்றது. மேலைத்தேசத்துத் தத்துவசாஸ்திரங்களும் சாங்கியநூற்கொள்கையைப் பெரிதும் பின்பற்றினவென்பதை "மேற்றிசைச்செல்வம்" என்னும்உரைத்தொடர்நிலையினுட்காட்டுவோம்.

26. இனி மூலப்பிரகிருதியினின்று இருபத்துமூன்று தத்துவங்களும் தோன்றியகிரமத்தை யாராய்தற் கெடுத்துக்கொள்வாம். மேலைப்பிரிவினுட்காட்டிய மேற்கோள்களோடு பின்வரும் சிவஞானசித்தியார்ச் செய்யுட்களையும் உடன்வைத்து ஆராய்வாம்.

"சித்தமா மவ்வி யத்தஞ் சிந்தனை யதுவுஞ் செய்யும்
புத்தியவ் வியத்திற் றோன்றிப் புண்ணிய பாவஞ் சார்ந்து
வத்துநிச் சயமும் பண்ணி வருஞ்சுக துக்க மோகப்
பித்தினின் மயங்கி ஞானக் கிரியையும் பேணி நிற்கும்.

"ஆங்காரம் புத்தி யின்க ணுதித்தகந் தைக்கு வித்தாய்
ஈங்கார்தா னென்னோ டொப்பா ரென்றியா னென்ன தென்றே
நீங்காதே நிற்குந் தானு மூன்றதாய் நிகழு மென்பார்
பாங்கார்பூ தாதி வைகா ரிகந்தைச தந்தா னென்றே".

"மனமது தைச தத்தின் வந்தொரு பொருளை முந்தி
நினைவது ஞ் செய்தங் கைய நிலைமைபி னிற்கு மாங்கே
இனமலி சோத்தி ராதி கன்மவிந் திரிய மெல்லாம்
முனமுறை செய்த வைகா ரிகந்தரு மென்பர் முன்னோர்".

"நற்செவி துவக்குக் கண்ணு நாசியைந் தினையு நல்லோர்
புத்தியிந் திரியமென்று புகன்றன ரிவைத மக்குச்

சத்தநற் பரிச ரூப விரதகந் தங்க ளைந்தும்
வைத்தனர் விடய மாக வடைவினின் மருவு மன்றே".

"வாக்கொடு பாதம் பாணி பாயுவோ டுபத்த மைந்தும்
நீக்கினர் முன்னே கன்மேந் திரியங்க ளெனநி னைந்தே
ஆக்கிய வசன கமன தானமும் விசர்க்கா னந்தம்
ஊக்கமா ரைந்து மைந்தின் றெழிலென வோதி னாரே".

"ஓசைநற் பரிச ரூப விரதகந் தங்க ளென்று
பேசுமாத் திரைக ளைந்தும் பிறக்கும்பூ தாதி கத்தில்
நேசவிந் திரியங் கட்கு நிகழறி விதனாற் காண்டும்
ஆசைசேர் மனநி தன்மாத் திரைபுரி யட்டகந் தான்

சாற்றிய பஞ்ச தன்மாத் திரைகளிற் சத்த முன்னாத்
தோற்றும் வான் வளிதீ நீர்மண் டொடக்கியே யொன்றுக்கொன் றங்
கேற்றமா மோசை யாதி யிருங்குணா மியைந்து நிற்கும்
ஆற்றவே விடய பூத மங்காங்கி பாவத் தாமே".

"இந்தா மாகி வான்று னிடங்கொடுத் திடுஞ்ச லித்துப்
பந்தவை கிட்டுங் காறீச் சுட்டொன்று வித்தல் பண்ணும்
நிரந்தரங் குளிர்ந்து நின்று பதஞ்செய்யு நீர்மண் டானும்
உரந்தருங் கடின மாகித் தரித்திடு முணர்ந்து கொள்ளே".

"மண்புன லனல்கால் வான்பால் வடிவுநாற் கோண மாகுந்
தண்பிறை மூன்று கோணந் தருமறு கோணம் வட்டம்
வண்பொன்மை வெண்மை செம்மை கறுப்பொடு தூமம் வண்ணம்
எண்டரு மெழுத்துத் தானும் லவரய றவ்வு மாமே".

"குறிகள்வச் சிரத்தி னோடு கோகநு தஞ்சு வத்தி
அறுபுள்ளி யமுத விந்து வதிதெய்வ மயன்மா லாதி
செறிபுக மீசனோடு சதாசிவம் பூத தெய்வம்
நெறிதரு கலையைந் திற்கு நிகழ்த்துவ ரிந்த நீர்மை".

இம்மேற்கோள்களை யாசாயும்வழிப் பெறப்படும்முடிபுகளைத்தெளிவு நோக்கி வகுத்துக் காட்டுவாம்.

௧. மூலப்பிரகிருதியானது தன்னிடத்துப்பொருந்திய சத்துவ ராஜத தாமதகுணங்களின் அவ்வியத்தவடிவாயுள்ளது. அவ்வியத்தம் அரும்பின்கண் மணம்போல வெளிப்படாது அடங்கிநிற்கும் நிலை.

ஸத்வரஜஸ்தமஸாம் ஸாம்யாவஸ்தா ப்ரக்ருதிஃ

சாமியம்-சமநிலை. குணதத்துவம் பிரகிருதியினின்றுதோன்றினும் இவை இரண்டுக்கும், சொரூபத்தால் வேறுபாடின்மையின் மேலோர் ஒன்றாகவேகொண்டனர்.

(உ) மூலப்பிரகிருதியே சித்தம் எனவும் படும். ஷோப்பேன் ஹாவேர் Schopenhaver) என்னும் ஜர்மானியதத்துவசாஸ்திரியார் "Will in nature" பிரகிருதியிற் சித்ததத்துவம் என ஆராய்ந்து கண்டனவனைத்தும் இம்முடிபிற்குச் சான்றாவன. மரமும் கொடியும் உரியகாலத்தில் மலர்கனிதருவதும், இனவேறுபாடின்றித் தெங்கில் தெங்கங்காயும் பனையிற் பனங்காயுந் தோற்றுவதும், இன்னோரன்னபிற வும் சித்ததத்துவத்தாலாவன. இத்தத்துவம் மனோதத்துவத்துக்கும் புத்தியகங்காரத்துக்கும் மேற்பட்டதாகலின் இதனால் ஏற்படுங் காரியங் களை அளந்துகூறுதல் ஒருவாற்றாலும் முடியாது. எல்லாவற்றுக்கும் காரணங்காட்டுவோமென்று சொல்லும் மேலைத்தேசத்துப்பண்டிதர்கள் சித்ததத்துவத்தை யளந்தறியமாட்டாது திகைப்புற்று இயற்கையறிவு என்று ஒருபெயரிட்டு மெல்லக் கடத்திவிட்டனர். இந்த இயற்கையறி வின் விசித்திரங்கள் மிகப்பல. புறாப்பறவையைச் சிறைசெய்து ஆயிர மைல்தூரத்துக்கப்பாற்கொண்டுசென்று சிறைநீக்கினால் அது நேராகப் பறந்து தன் இருக்கையை யடையும்; தேனீயானது பலபூக்களிலுஞ் சென்று தேனைச்சேகரித்து வந்தவழியேதிரும்பாது ஈற்றில்நின்றவிடத் தினின்று நேரே பறந்து தவறாது தன்கூட்டினை யடையும்; மழைவருவ தற்கு முன் எறும்புமுட்டைகொண்டு திட்டையேறுகின்றது; நீர்ப் பறவையின்குஞ்சு பொரித்தமாத்திரத்தே நீர்நிலையையடைந்து நீந்து கிறது. இவையெல்லாம் சித்ததத்துவத்தினால் நிகழுகின்றன. நாம் உண்டஉணவைச் சீரணிப்பதும், உதிரத்தைச் சுற்றியோடச்செய்வதும் சுவாசிப்பதும் நம்மையறியாது நடக்கின்றசெயல்களாதலால் இவை யெல்லாம் சித்ததத்துவத்தின்பாற்படுவன. சாதாரணமனிதரிலும்

தாவரசங்கம உயிர்களிலும் சித்தம் தானாகவே யியங்குவது. யோக சாதனையினால் தான் புருடன் என்பதைச் சாக்ஷாத்காரமாக அறிந்து பிரகிருதியாகிய சித்ததத்துவத்தைத் தன்வழிப்படுத்திய சித்தன் சித்ததத்துவத்தைத் தான் விரும்பியவாறியக்கும் வலிமையுடைய வனுவான். இத்தகையோனுடையசெயல்கள் சாதாரணமனிதருக்கு இறம்பூதினை விளைக்குந்தன்மைய.

(௩) மூலப்பகுதியாகிய சித்ததத்துவத்தினின்று மகத் என்னும் புத்திதத்துவந் தோன்றும். புண்ணிய பாவம், வஸ்துநிச்சயம், சுகம், துக்கம், மோசம் என்னும் இவை புத்திதத்துவத்தைச் சார்ந்துநிற்பன. ப்ரக்ருதே ர்மஹாந்.

(௪) புத்திதத்துவத்தினின்று "நான்," "எனது" என்னும் உருவாகிய அகங்காரதத்துவம் தோன்றும். மஹதோऽஹங்கார:

(௫) அகங்காரத்தினின்று இருவகையிந்திரியங்களும் பஞ்சதன் மாத்திரைகளுந் தோற்றுவன. அஹங்காராத் தந்மாத்ராண்யுபயமிந்த்ரியம். மெய், வாய், கண், மூக்குச் செவியென்னும் ஞானேந்திரிய மைந்துக்கும் மனத்துக்கும் உற்பத்தித்தானமாய அகங்காரத்தைத் தைசதவகங்காரமென்றும், வாக்கு பாதம் பாணி பாயு, உபத்தம் என்னும் கன்மேந்திரியம் ஐந்தினுக்கும் உற்பத்தித்தானமான அகங்காரத்தை வைகாரிக அகங்காரம் என்றும், சத்தம் பரிசம் ரூபம் ரசம் கந்தம் ஆகிய ஐந்து தன்மாத்திரைகளுக்கும் உற்பத்தித்தானமான அகங்காரத்தைப் பூதாதி யகங்காரமென்றும் அறிஞர் வகுத்துக் கூறுப.

(௬) பஞ்சதன்மாத்திரைகளினின்று ஸ்தூலபூதம் ஐந்துந் தோற்றுவன. தந்மாத்ரேப்ய: ஸ்தூலபூதாநி மேற்காட்டிய இருபத்துநான்கினோடு புருடனையும் உடன்வைக்கப் பொருள் இருபத்தைந்தாமென்பது. புருஷ இதி பஞ்சவிம்ஶதிர் கண:.

(௭) மேற்காட்டிய சாங்கியசூத்திரத்தின்பொருளையும் அதனோடு கருத்தொத்த சிவஞானசித்தியார்ச் செய்யுட்களின் பொருளையும் ஒருவாறு விளக்கிக்காட்டினும். இப்பொருளையே ஒரு அட்டவணைவடிவாகவுங் காட்டுவாம்,



(அ) இக்கொள்கையொடு சிறிது வேறுபட்டுத் தோன்றுவதாகிய மணிமேகலைநூலார்கொள்கையை மற்றொரு அட்டவணையாகத் தருவாம்.



(க) இச்சாரூபமாகிய மனம், புத்தி, அகங்காரம் மூன்றும் தன்மாத்திரைகள் ஐந்தும் ஆகிய எட்டுங்கூடியது புரியட்டக உடம்பாம்.

(௧௦) பூதங்களுக்குரிய பெயர், குணம், தொழில், வடிவம், நிறம், பீசாக்ஷரம், குறி, அதிதெய்வம் என்னும் இவற்றை ஒரு அட்டவணையாகத் தருவாம். இவற்றின் கருத்தை விரிவாகப் பின்னாராய்வாம்.

பெயர்.	பிருதுவி.	அப்பு.	தேயு.	வாயு.	ஆகாயம்.
குணம்	கடினம்	குளிர்ச்சி	சூடு	சலிப்பு	அகற்சி
தொழில்	உரந்தரல்	பதஞ்செய்தல்	ஒன்றுவித்தல்	திரட்டல்	இடந்தரல்
வடிவம்	நாற்கோணம்	இருகோணம்	முக்கோணம்	அறுகோணம்	வட்டம்
நிறம்	பொன்மை	வெண்மை	செம்மை	கருமை	புகைநிறம்
பீஜாக்ஷரம்	லங்	வங்	ரங்	யங்	ஹங்
குறி	வச்சிரம்	கமலம்	சுவஸ்திகம்	அறுபுள்ளி	அமிர்தவிந்து
அதிதெய்வம்	பிரமா	விஷ்ணு	உருத்திரன்	மஹேசுவரன்	சதாசிவன்

27. மேலோர்நூல்களிற் காணப்படுகிற பூதபரிணாமவியல்பினையாராய்ந்து அப்பாற் செல்வாம்.

சுவைமை பிசைமை தோற்ற நாற்றமூ
றவையு நீயே யடுபோ ரண்ணல்
அவையவை கொள்ளுங் கருவியு நீயே
முந்தியாங் கூறிய வைந்த னுள்ளும்
ஒன்றதிற் போற்றிய விசும்பு நீயே
இரண்டி னுணரும் வளியு நீயே
மூன்றி னுணருந் தீயு நீயே

நான்கி னுணரு நீருநீயே
ஐந்துடன் முற்றிய நிலனு நீயே.

(பரிபாடல் ௧௩-ம் பாட்டு)

𑌯𑌥𑌾 𑌪𑍍𑌰𑌧𑌾𑌨𑍇𑌨 𑌮𑌹𑌾𑌨𑍍 𑌮𑌹𑌤𑌾𑌸 𑌤𑌥𑌾 𑌵𑍃𑌤𑌃
𑌭𑍂𑌤𑌾𑌦𑌿𑌸𑍍𑌤𑍁 𑌵𑌿𑌕𑍁𑌰𑍍𑌵𑌾𑌣𑌃 𑌶𑌬𑍍𑌦𑌤𑌨𑍍𑌮𑌾𑌤𑍍𑌰𑌕𑌂 𑌤𑌤𑌃।
𑌸𑌸𑌰𑍍𑌜 𑌶𑌬𑍍𑌦𑌤𑌨𑍍𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌤𑍍 𑌆𑌕𑌾𑌶𑌂 𑌶𑌬𑍍𑌦𑌲𑌕𑍍𑌷𑌣𑌂।
𑌶𑌬𑍍𑌦𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌤𑌥𑌾𑌕𑌾𑌶𑌂 𑌭𑍂𑌤𑌾𑌦𑌿𑌃 𑌸 𑌸𑌮𑌾𑌵𑍃𑌣𑍋𑌤𑍍।
𑌆𑌕𑌾𑌶𑌸𑍍𑌤𑍁 𑌵𑌿𑌕𑍁𑌰𑍍𑌵𑌾𑌣𑌃 𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌸𑌸𑌰𑍍𑌜 𑌹।
𑌬𑌲𑌵𑌾𑌨𑌭𑌵𑌦𑍍 𑌵𑌾𑌯𑍁𑌃 𑌤𑌸𑍍𑌯 𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑍋 𑌗𑍁𑌣𑍋 𑌮𑌤𑌃

விஷ்ணுபுராணம்.

இவற்றை யாராயுமிடத்துப் பூதபரிணாமத்தைப்பற்றி பொருசாரார் கொண்டகொள்கை புலப்படுகின்றது. தன்மாத்திரைகள்பிறப்பதற்குமுன் மகத்தத்துவத்திலிருந்து தோன்றியபூதாதியானது மகத்தத்துவத்தாற் சூழப்பட்டுத் தன்னிலையிலே சுழன்றுகொண்டிருந்தது இங்ஙனம் சுழன்றுகொண்டிருந்த பூதாதியிலே ஒலிக்குறிப்புத்தோன்ற அவ்வொலிக்குறிப்புக்குப் பற்றுக்கோடாகியபாகம் ஆகாசம் என்னும் மகாபூதமாயிற்று, ஒலிக்குறிப்புத்தானே சப்ததன்மாத்திரையெனப்பட்டது. அதன்பின்னர்ச் சப்ததன்மாத்திரையினும்பார்க்கதடிப்பு மிக்கதாகிய பரிசதன்மாத்திரை பூதாதியில்நின்று பிறந்தது. சப்த பரிசதன்மாத்திரையாகிய இரண்டுக்கும் பற்றுக்கோடாகநின்றபாகம் வாயுஎனப்பட்டது. பின்னர் ரூபதன்மாத்திரை யெழுந்தது; சப்த பரிச ரூபமென்னும் மூன்றுதன்மாத்திரைகளுக்கும் பற்றுக்கோடாக நின்றபாகம் தேயு எனப்பட்டது. பின்னர் ரசதன்மாத்திரை தோற்றியது. சப்த பரிச ரூப ரசமென்னும நான்குதன்மாத்திரைகளுக்கும் பற்றுக்கோடாகநின்றபாகம் அப்புஎனப்பட்டது. பின்னர்க் கந்ததன்மாத்திரையுதித்தது. சப்த பரிச ரூப ரச கந்தம் என்னும் ஐந்துதன்மாத்திரைக்கும் பற்றுக்கோடாகநின்றபாகம் பிருதுவியெனப்பட்டது. பஞ்சதன்மாத்திரைகளும் பஞ்சமகாபூதங்களும் பூதாதியிலிருந்து தோற்றிய வான்முறை யிதுவாகும். இதனைப் பின்வரும் அட்டவணையும் விளக்கும்.



இனி வேதாந்தநூல்கள் பூதபரிணமத்தைப்பற்றிக்கொண்ட கொள்கை வருமாறு :—பஞ்சதன்மாத்திரைகளேயும் நிறுத்தி ஒவ்வொன்றையும் இரண்டுசமபாகமாகப் பங்கிடுக. ஒவ்வொருதன்மாத்திரையிலும் ஒரு பாகத்தை வைத்துக்கொண்டு மற்றொருபாகத்தை நாற்கூறுக்குக ; இங்ஙனம் பெற்ற கூறுகள் பூரணதன்மாத்திரையில் எட்டிலொன்று என்பதுவெளிப்படை. சப்ததன்மாத்திரை அரைப்பாகத்தோடு பரிச தன்மாத்திரை எட்டிலொன்று ரூபதன்மாத்திரை எட்டிலொன்று ரசதன் மாத்திரையெட்டிலொன்று கந்ததன்மாத்திரையெட்டிலொன்று என்னும் இவற்றைச்சேர்க்க ஆகாசமகாபூதம் பிறக்கும். பரிசதன்மாத்திரை அரைப்பாகத்தோடு ஏனையவற்றுள் எட்டிலொன்று எட்டிலொன்று ஆகச்சேர்க்க வாயுமகாபூதம்பிறக்கும். இங்ஙனமேபிறவுமாம்.

> "பாழெனக் காலெனப் பாகென வொன்றென
> இரண்டென மூன்றென நாலென ஐந்தென
> ஆறென ஏழென எட்டெனத் தொண்டென
> நால்வகை யூழியெண் ணவிற்றுஞ் சிறப்பு."

என்னுங் கடுவனிளவெயினனர் கூற்றுக்கு உரைகண்ட பரிமேலழகர் "பாழ்=புருடன். சாங்கியர் பிறிதொன்றுபிறத்தற்கிடனுகாதென்ப வாகலின் அவர்மதம்பற்றிப் புருடனைப் பாழ் என்றார் ; கால்=ஆகாய

முதற்பூதங்களைந்தும்; பாகு=சொல்லல், இயங்கல், கொடுத்தல், விடுத்தல், இன்புறுதல் என்னுந்தொழிலாற்பாகுபட்ட வாக்கு, கால், கை, பாயு, உபத்தம் ஆகிய கன்மேந்திரியங்களைந்தும்; ஒன்று ஆகாயத்தின் பண்பாகிய ஓசை; இரண்டு காற்றின் சிறப்புப்பண்பாகிய ஊறு; மூன்று தீயின் சிறப்புப்பண்பாகிய உருவம்; நான்கு நீரின்சிறப்புப்பண்பாகிய சுவை; ஐந்து நிலத்தின்சிறப்புப்பண்பாகிய நாற்றம்; ஆறு செவி, தோல், கண், நா, மூக்கு என்னும் அறிவுப்புலன்களைந்தும்மனமும்; ஏழு அகங்காரம்; எட்டு மான்; ஒன்பது மூலப்பகுதி; பூதங்களைந்தும், ஞானேந்திரியங்களைந்தும், புலன்களைந்தும் மனம்முதலிய அந்தக்காணங்கள் மூன்றும் மூலப்பகுதியும் புருடனுமெனப்பட்ட தத்துவம் இருபத்தைந்து," எனக் கூறினர்.

"ஆதி யில்லாப் பரமா ணுக்கள்
தீதுற் றியாவதுஞ் சிதைவது செய்யா
புதிதாய்ப் பிறந்தொன் றொன்றிற் புகுதா
முதுநீ ரணுநில வணுவாய்த் திரியா
ஒன்றிரண் டாகிப் பிளப்பதுஞ் செய்யா
அவலைப் போலப் பரப்பதுஞ் செய்யா."

என்னும் உரையும் இத்தொடர்பில் ஆராயற்பாலது.

28. இனி, பூதங்களைந்தானும் புற்கலமாகிய உடம்பு ஆகும் மார்க்கத்தை முன்னோருரையின்படி யெடுத்துரைப்பாம். இப் பிரிவினுட் கூறப்படுவன இசைநுணுக்கமுடைய சிகண்டியார் கூற்றென உரையாசிரியர் அடியார்க்குநல்லாரால் எடுத்துக்காட்டப்பட்டன.

புற்கலம் - உடம்பு. அப்புற்கலத்துக்கு முதலாயுள்ள பூதமாவன: மண் நீர் தீ வளி வான் என விவை. என்னை?

"மண்ணுட னீர்நெருப்புக் கால்வான மென்றிவைதா
மெண்ணிய பூதங்க ளென்றறிந்து—நண்ணிய
மன்னர்க்கு மண்கொடுத்து மாற்றார்க்கு விண்கொடுத்த
தென்னவர்கோ மானே தெளி,"

என்றாராகலின்.

இப்பூதங்களைந்தானும் புற்கலமாமென்ற ஆசானை மாணாக்கன் பணிந்து பூதங்கடாம் ஒன்றோடொன்றுகூடுவனவல்ல; மண் செறிதலைக் குணமாகவுடைத்து; நீர் நெகிழ்தலைக்குணமாகவுடைத்து; தீத் தெறுதலைக்குணமாக வுடைத்து; காற்று ஓரிடத்தும் நிலைபெற்றுநிற்பதன்று; ஆகாயமென்பது ஒருருவுண்டில்லை யன்று; அன்றியும்,

"செப்பிய பூதங்கள் சேர்ந்தோர் குறியன்றே
அப்பரிசு மண்ணைந்து நீர்நாலா—மொப்பரிய
தீயாகின் மூன்றிரண்டு காற்றம் பரமொன்று
வேயாறுந் தோளி விளம்பு"

என்பதனால் மண் ஐந்துபயனுடைத்து; நீர் நான்குபயனுடைத்து; தீ மூன்றுபயனுடைத்து; காற்று இரண்டு பயனுடைத்து; வான் ஒரு பயனுடைத்து; ஆதலால் இவை ஒன்றோடொன்று கூடுவனவல்லவாகவும் இவற்றின் கூட்டம் உடம்பென்றீராதலால் இவ்வைந்தின்கூட்டம் உடம்பாவது எவ்வாறோவெனின், இதற்குவிடை :

"மெய்வாய்கண் மூக்குச் செவியெனப் பேர்பெற்ற
வைவாயு மாயவற்றின் மீதடுத்துத்—துய்ய
சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தா
லவை முதற் புற்கல மாம்"

என்பது பூதங்கள் பரிணமித்து உடம்பாமாறு கூறுகின்றது. பூதங்களைந்தும் தத்தம் தன்மைநீங்கி மண் உடம்பாயும், நீர் வாயாயும், தீக் கண்ணாயும், காற்று மூக்காயும், ஆகாயம் செவியாயும் நின்று உடம்பாம் பொறிகடோறும் வினியோகிக்கப்பட்ட புலன் சுவைமுதல் ஐந்துவகைப்படும். இவ்வைந்தும் பொறியைந்தினுமேறி, மண்ணால் உடம்பு ஊறுயும், நீரால் வாய் சுவையாயும், தீயாற் கண் ஒளியாயும், காற்றால் மூக்கு நாற்றமாயும், வானாற் செவி ஓசையாயும் வந்து உடம்பாம். அன்றியும், மண்ணின்பகுதி நரம்பு, இறைச்சி, மயிர் தோலென வைந்து. நீரின் பகுதி நீர் மூளை சுக்கிலம் நிணம் உதிரம் என வைந்து.

"பசிசோம்புனிமதுனங்காட்சிநீர்வேட்கை
தெசிகின்றதீக்குணமோரைந்து—மொசிகின்ற
போக்குவரவுநோய்தும்பித்தன்மெய்ப்பரிசம்
வாக்குடையகாற்றின்வகை."

பசி, சோம்பு, மைதுனம், காட்சி, நீர்வேட்கை யென்பன தீயின் குணம், போக்கு வரவு நோய்தும்பித்தல் பரிசம் என விவை காற்றின்குணம்.

"ஓங்கும்வெகுளிமதமானவாங்காரம்
நீங்காவுலோபமுடனிவ்வைந்தும்—பாங்காய
வண்ணமுலைமடவாய்வானகத்தின்கூறென்று
ரெண்ணிமிகநூலுணர்ந்தோரெண்."

வெகுளி மதம் மானம் ஆங்காரம் உலோப மென விவை யாகாயத்தின் குணம்: இப்பூதகுணம் இருபத்தைந்துங்கொண்டு உடம்பாம்.

"ஒப்பார் பிராண னபான னுதான னுடன்
தப்பா வியானன் சமானனே—யிப்பாலு
நாகன் றனஞ்சயன் கூர்மன் கிருகரன்
தீதிலாத் தேவதத்த னே."

என்பது தசவாயுக்களையுணர்த்துகின்றது. அவை ஆவன: பிராணன் அபானன்—உதானன் வியானன் சமானன் நாகன் கூர்மன் கிருகரன் தேவதத்தன் தனஞ்சய னெனவிவை.

"இடைபிங் கலைசுழுனை காந்தாரி யத்தி
புடைநின்ற சிங்குவை சங்கினிபூ டாவோ
டங்குகு கன்னி யலம்பு வெனவுரைத்தார்
தங்குதச நாடிக டாம்."

தசநாடிகளாவன; இடை, பிங்கலை, சுழுமுனை, காந்தாரி, அத்தி, சிங்குவை, சங்கினி, பூடா, குகு, அலம்பு என விவை.

"பூத வகைகளோ ரைந்தாய்ப் பொறியைந்தாய்
வாதனையோ ரைபைந்தாய் மாருதமு—மேதகுசீர்ப்
பத்தாகு நாடிகளும் பப்பத்தாம் பாரிடத்தே
முத்திக்கு வித்தா முடம்பு."

என்பது பூதபரிணாமமுணர்த்துகின்றது. இங்ஙனம், பூதங்களாலும் பொறி முதலியவற்றாலும் வாயுக்களாலும் நாடிகளாலும் பரிணமித்துச் சுக்கில சுரோணிதங்களாலே உடம்பாகக்கொண்டு இருவினையுந் தன்னகத்தடக்கி உயிர் பிறக்குமென்றறிக.

(தொடரும்.)

விபுலானந்தர்.

1924-ம் ௵ எப்பிரல்மீ 29௳ (ரக்தாக்ஷி ௵ சித்திரைமீ 17௳) காலை 9-மணிக்குக் கூடிய மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் காரியநிர்வாகஸபையில் முடிவுசெய்யப்பட்ட தீர்மானங்களின் விவரம்.

———(●)———

1. மாட்சிமைதங்கிய கனம் B. இராஜராஜேஸ்வரசேதுபதி மன்னரவர்கள்—அக்கிராசனாதிபதி.
2. மகா-ா-ா-ஸ்ரீ S. சோமசுந்தரபாரதி அவர்கள் M.A., B.L.,
3. „ M. கோபாலகிருஷ்ணையரவர்கள்.
4. „ N. R. கிருஷ்ணஸாமி ஐயங்காரவர்கள் B.A., B.L.,
5. „ T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் B.A., B.L.,
6. „ K. ராமையங்காரவர்கள் B.A., B.L., M.L.A.

இவர்கள் வந்திருந்தார்கள்.

தீர்மானங்கள்.

I. 1923-௵ டிசம்பர்மீ முதல் 1924-௵ மார்ச்சுமீ முடிய உள்ள சங்கம் வரவு செலவு கணக்குகளை அங்கீகரிக்கலாயிற்று.

II. மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் அங்கத்தினராக வேண்டுமெனக் கோரிய அடியிற்குறித்துள்ளவர்களை அங்கத்தினராக அங்கீகரிக்கலாயிற்று.

(1) மகா-ா-ா-ஸ்ரீ மு பெரி. வீர. அழகர்சாமிவேளார் அவர்கள், கோனாபட்டு.

(2) „ S. ஆழ்வாரையங்காரவர்கள், தலைமையாசிரியர், கற்பகவிநாயக கலாசாலை, கோனாபட்டு.

(3) „ உ. ம. சே. முகியித்தீன்பிள்ளை ராவுத்தர் அவர்கள், (சொந்தக்காரர். காந்திப்பாறை எஸ்டேட், திருவாங்கூர் ஹைரேஞ்ச்), கோம்பை.

III. சங்கத்தின் வருஷோத்ஸவக்கூட்டம் கூடாததினால், சங்கத்தின் காரியநிர்வாகசபைக்கு அங்கத்தினர்களைப் புதிதாகத் தெரிந்தெடுத்தல் கூடவில்லை. ஆகையால், வருஷோத்ஸவக்கூட்டத்தில் மகா சபையோரால் புதிதாக அங்கத்தினர்கள் தெரிந்தெடுக்கப்படும்வரை இப்பொழுதுள்ள நிர்வாகசபை அங்கத்தினர்களே தொடர்ச்சியாக அங்கத்தினராயிருந்து வருவார்கள்,

IV. சங்கக்கட்டட ரிப்பேர்முதலியவைகளை, மகா-ள-ள-ஸ்ரீ K. ராமமையங்காரவர்கள், மகா-ள-ள-ஸ்ரீ S. சோமசுந்தரபாரதி அவர்கள், மகா-ள-ள-ஸ்ரீ N. R. கிருஷ்ணஸாமி ஐயங்காரவர்கள் இவர்களிருந்து கவனித்து வேலைகள் சீக்கிரம் முடியும்படி ஏற்பாடுசெய்யவேணுமென்று அவர்களைக் கேட்டுக்கொள்ளலாயிற்று.

கட்டடத்தின் நடுக்கூடம் (Central Hall) ரிப்பேர்சம்பந்தமாகக் கொடுத்துள்ள இரண்டுவித அபிப்பிராயத்துள் இப்போதுள்ள மேலச் சுவரை வைத்தபடியே ரிப்பேர்செய்தல் சம்பந்தமான அபிப்பிராயம் அங்கீகரிக்கலாயிற்று.

V. சங்கத்தின் வருஷாந்தக்கணக்குகளைப் பரிசோதனை செய்வதற்கு மதுரை ஹைக்கோர்ட்டுவக்கீல் மகா-ள-ள-ஸ்ரீ V. சுந்தரமையரவர்களை ஆடிட்டராக நியமிக்கலாயிற்று.

VI. 1923–'24-ம் ஷத்திற்கு, சரியான வரவு செலவு மதிப்புத் திட்டம் தயாரித்துச் சங்கத்தின் காரியநிர்வாகசபையாருக்கு அனுப்பப்படவேண்டுமென்று தீர்மானிக்கலாயிற்று.

VII. (1) வித்வத்சம்பாவனை பரீக்ஷைசம்பந்தமாகப் புதுக்கோட்டை மஹாராஜாகாலேஜ் பிரின்ஸிபால் அவர்கள் அனுப்பிய கடிதம்முதலியவற்றைச் சங்கத்தின் வித்தியாவிஷய ஆலோசனைசபையாருக்கனுப்பும்படி தீர்மானிக்கலாயிற்று.

(2) திருநெல்வேலி மகா-ள-ள-ஸ்ரீ S. முத்தையபிள்ளை அவர்கள் தாம் சங்கத்தின் அங்கத்தினராக இருப்பதினின்றும் விலகிக்கொள்வதாக எழுதிய ராஜீநாமா ரிக்கார்டுசெய்யலாயிற்று.

(3) சங்கம் அச்சாபீஸ், பைண்டிங் ஆபீஸ்களுக்கு அதிகாரி (Superintendent) ஒருவரை நியமகம்செய்ய வேண்டிய அவசியத்தைப்பற்றியவிஷயம் தள்ளிவைக்கலாயிற்று.

(4) சங்கப்பரீக்ஷைகள் சம்பந்தமாக சங்கமாபீசு மானேஜர் எழுதிய குறிப்பு ரிக்கார்டு செய்யலாயிற்று.

மதுரை,
29–4–1924.

B. இராஜராஜேஸ்வரசேதுபதி,
அக்கிராசனாதிபதி,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,

லையுஞ் சிலப்பதிகாரமும்.

௨00-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

மேகலை வணக்கமும் சிலப்பதிகாரமும்.

மையவணங்கிய ஆரியமன்னர், பெருஞ்சிறைக்சோட்
குடகக்கொங்கர், மாளுவவேந்தர், இலங்கைக் கய
ரயெல்லாங் கூறியிருப்பவும் அவ்வம்மையை வணங்
க் கூறுததுகொண்டு மணிமேகலை என்னும் நூலுட்
மகலை வணக்கமும் பொருந்தாதென்று பிள்ளையவர்
றுத்துகின்றனர்.

மையின்பிரதிட்டைக்கும் கும்பாபிஷேகத்திற்கும்
ழியாகநண்ணி வணங்கிய மணிமேகலை வேற்றுருக்
லையிருந்துவந்தமையின் அடிகட்கது புலப்பட்டில

ரிமேகலை என்பவர்களின் துறவும், மாடலன் தேவங்
ளின் வழியாகவே அடிகளறிந்ததாகச் சிலப்பதிகாரத்
நலும் மேலையதை வலியுறுத்தா நிற்கும்.

மதையிலே கண்ணகியம்மையைக் கடவுண் மங்கலங்
யே எடுத்துக்கூறப்பட்டமையும், உரைபெறுகட்டுரை
யப்பிரதிஷ்டித்தாரையே கூறப்பட்டமையும் நோக்காது
யை வணங்கிய எல்லாரையுங் கூறியிருக்கவும் மணி
லையை வணங்கியிருப்பளேல் அடிகள் கூறுதிரார் என்று
கூறுவது பொருந்தாது.

X. சிலப்பதிகாரம் இயற்றப்பட்ட காலம்.

உரைபெறு கட்டுரையிலே உறையூர்ச் சோழனாகிய
கிள்ளி, வெற்றிவேற்செழியன், கொங்கிளங்கோசர், கடல்
கயவாகு என்னுமிவர் நங்கைக்குச் சிறப்பயர்ந்தனவெல்

லாங் கூறப்படுகின்றன. இவற்றையெல்லாஞ் செ
நூல்செய்தபின்னரே இவ் வுரைபெறு கட்டுரை
புலனாகும்.

இக்கட்டுரை உறையூர்ச்சோழனை எடுத்துக்
சோழன் நங்கைக்குச் சிறப்பயர்ந்ததை எடுத்துக்கூ
அழிவின்பின்னரே இது செய்யப்பட்டமை வெள்

சாத்தனரால் கண்ணகியம்மையின் வரலாறுக
வுடனே அடிகளும் சிலப்பதிகாரத்தைப் பாடத்தொட
சிக்காதை பாடிமுடித்தவளவிலே இமயஞ்சென்ற செ
ணகியம்மை சிலையொடும் வந்தான். ஆங்கு நிகழ்
கேட்டறிந்த அடிகளும் கால்கோட்காதை, நீர்ப்பு
காதை என்னு மிவற்றைப் பாடியிருத்தல் வேண்டும்.

"குன்றக் குரவையு மென்றிவை யனைத்துடன்,
னீர்ப்படை நடுகல், வாழ்த்து வரந்தரு காதையோ,
என்னும் இவ்வடிகளிலே குன்றக்குரவையும் என்று
விருபத்து நான்குடனே என்று பிரித்தது நான்ட
தாகாது ; நாடுகாண்காதையும், காடுகாண்காதையும்
கைக்கேற்ப முன்னம் பிரிக்கப்பெறுமையின் என்க. "க
நீர்ப்படை நடுகல்" என்னும் நான்கினையும் ஓரடிக்குள்வே
தும், அதன் பின்னர் "வாழ்த்து வரந்தரு காதை யொடு
றைத் தனியடியில் அமைத்துப்போதலின், இவ்விருகா
காதைமுற்றுப்பெற்றவுடனே எஞ்சியகாதைகளையும் முடி
காட்சிக்காதையைச் செய்தவர் செங்குட்டுவன் வஞ்சிசே
எஞ்சியவற்றையும் இயற்றிவிட்டார்என்றும் அறியக்கிட

சிலப்பதிகாரத்தின்பதிகம் பிறராற்செய்யப்பட்டது .
டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்" என்று தன்
ளிளியில் அடிகள் குறிக்கப்பட்டனர். இளங்கோவடிகளு
லடிக ளருள" என்னு மிவற்றையும் நோக்குக.

இனி, அடிகள் தம்மைத்தாமே கூறிக்கொள்ளும்
ஒருமைக்கிளவியிலே கூறிச் செல்கின்றார். வெள்ளிச்சாலை

போந்தபின்—னியானுஞ் சென்றேன்" "என்றிற முரைத்த விமையோ ரிளங்கொடி" என்பவற்றையும் நோக்குக.

இக்கூறியவற்றானே சாத்தனாரையும் "யாம்" என்னுங்கிளவி உள் ளடக்கியதென்பது பொருந்தாதென்க.

"அடிகணீரே யருளுகென் றற்கு"என்னும் இதனையும் ஆதாரமாகக் கொண்டு சாத்தனாரையும் பிற்காலத்தார் உள்ளடக்கி விட்டார் போலும். இவ்வடக்கியார்க்கு "நன்னூற் புலவற்கு" என்றதூஉம் வலியாயிற்றுப் போலும்.

மற்றுத்தான் இக்கூற்றுக்குளதாகுங் காரணந்தான் யாதோவெனிற் கூறுதும். சாத்தனார் கதையின் வரலாற்றினைக் கூறியது கொண்டு அவர்தமக்கு அக்கதை செய்தலில் ஊக்கஞ் சென்றிலது என்னும் இதனையும் குறிப்பித்தற்கு இங்ஙனங் கூறினாரென்க.

சிலப்பதிகாரம் நிறைவேறிய பின்னரே மணிமேகலை செய்யப்பெற்ற தென்பது இவ்விருபெருநூலின் ஒருபெரும்போக்கினை உற்றுநோக்கு வார்க்கு உண்மையாகும்.

சிலப்பதிகாரத்தைச் சாத்தனார் கேட்டபிறகே அவர் மணிமேகலை நூலையியற்றி வெற்றிவேற்செழிய னவைக்களத்தே அரங்கேற்றினா ரென்க.

சிலப்பதிகாரம் கண்ணகியம்மையின்வரலாற்றினைச் சாத்தனார் வழியாகக் கேள்வியுற்ற அடிகள் அதுமுதலாகவே இயற்றிநிறை வேற்றினா ரென்பது முன்னரே விளக்கப்பட்டது. மணிமேகலையின் துறவு வாழ்த்துக்காதையிற்றான் கேட்கப்படுகின்றது. இதனான் மணிமேகலை என்னும் நூல் சிலப்பதிகாரம் இயற்றப்பெறுவதற்கு முன்னரே நிறைவேறிற்றென்பது பொருந்தாதென்க.

ஆயின் "நன்னூற் புலவற்கு" என்று அவர் விதந்துகூறப்பட்ட மைக்குக் காரணம் இன்றாகிக் குற்றம் பயக்குமெனிற் பயவாது; என்னை? தொகைநூல்களிலே அவரது பாக்கள் யாக்கப்பட்டமையின் என்க.

X. புகாரழிவுஞ் சிலப்பதிகாரமும்.

மணிமேகலையிற் பலவிடங்களிலுங் கூறப்பட்ட புகாரழிவைச் சிலப்பதிகாரம் ஓரிடத்திலேனுங் கூறாது போந்தமையிற் சிலப்பதிகாரத்துக்கு மணிமேகலை பிந்திய நூலென்று பிள்ளையவர்கள் கூறுகின்றார்கள்.

அடிகள் வாழ்த்துக்காதை பாடிமுடிக்கும் வரையினும் புகாரழிவைத் தெரிந்துகொண்டில ரென்பதுவே இதனாற்றெற்றெனப் புலனாகின்றது. மாதவி மணிமேகலைகளின் துறவைத்தானும் வெகுகாலங் கழித்து அறிந்துகொண்டிலர் என்பது ஏற்புடைத் தாகாதா?

உரைபெறு கட்டுரையுள் "அதுகேட்டுச் சோழன் பெருங்கிள்ளி கோழியகத்து எத்திறத்தானும் வரந்தரு மிவளோர் பத்தினிக்கடவுளாகுமென நங்கைக்குப் பத்தினிக்கோட்டமுஞ் சமைத்து நித்த விழாவணி நிகழ்வித் தோனே". உறையூர்ச்சோழர் இங்ஙனம் நங்கைக்கு இயற்றியதை எடுத்துக் கூறிய அடிகள், புகார்ச்சோழர் செயலையும் எடுத்துக் கூறிலர் ஆதலினானும், "விரிதிரை வந்து வியனகர் விழுங்க—வொருதனி போயின னுலக மன்னவன்" என்று மணிமேகலை கூறினமையானும், இக்கடலழிவைக்கூறுதற்கு இடனின்மையானும் புகாரழிவுகொண்டு அந்நகர்ச் சோழன் நங்கைக்குச் சிறப்பயர்ந்தில னென்றுங்கு உரைபெறுகட்டுரையுட் கூறுதல் அசம்பாவிதமும், அமங்கலமும் ஆகுமாதலானும் சிலப்பதிகாரத்தி லிவ்வழிவு கூறப்பட்டில தென்க.

உதயகுமாரன் ஒருகணிகையின் பொருட்டு உயிர் விடுத்தமையானும், அதனைச் சிலப்பதிகாரங் கூறவேண்டுமென்னுமோர்யாப்புறவின்மையானும், அவனது சாவும் சிலப்பதிகாரத்தில் இல்லையென்க.

இவற்றாற் புகாரழிவும் உதயகுமாரன் சாவும் சிலப்பதிகாரத்திற் குறிக்கப்பட்டில ஆதலிற் சிலப்பதிகாரத்தினும் மணிமேகலை காலத்திற் பிந்திய நூலாகுமென்ற பிள்ளையவர்கள் வாதம் பொருந்தாதென்க.

புகாரழிவு வஞ்சிசேர்ந்த தேவந்திகை முதலியோர்க்குத் தெரிந்திருக்குமேல் அவர்,

கோப்புகழ மாதவிக்குங் கோவலற்கும் வரிப்பாவாற்
றீச்செய்கை செய்கடலே தெய்வப்புகார் நகரை
மோய்ச்சென் றழித்ததையுங் கேட்டாயோ தோழி
எரிமதுரை யழித்ததையுங் கேட்டாயோ தோழி.

என்றாங்குப் பாடியிருப்பர்.

அங்ஙனம் பாடிலாாதலி னவர்க்கது புலப்பட்டிலதென்க. அக்கடல் கோளை முக்கால வுணர்ச்சிகொண்ட அறவணவடிகள்பால் மாசாத்துவானும், தெய்வஞ்சான்ற தீவதிலகைபால் மணிமேகலையுமே அது போதே யறிந்தனராதலிற் பிறர்க்கது தெரிந்திலதென்க.

மாடலனுந் தேவந்திகையும் செங்குட்டுவற்கு மாதவி மணிமேகலை என்னும் இவரை யுள்ளிட்டோர்தம் வரலாற்றுமுறையைக் கூறிலரேல் சிலப்பதிகாரம் கண்ணகியம்மையின் தாயும் மாமியும் இறந்தது; தந்தை மாமன், மாதவி, மணிமேகலை என்னுமிவர் துறந்தது என்னும் இத்தொடக்கத்தனவற்றைக் கூற இடம்பெறுது. பெற்றிலதேல் இந்நிகழ்ச்சியெல்லாம் பொய்யாகுங்கொல்லோ?

மணிமேகலையிலே மாநாய்கன், கண்ணகியம்மையின்தாய், மாமி, கண்ணகியம்மை சுவர்க்கம்புக்கதை உணர்த்திய மாடலன்என்னும் இவர்கள் கூறப்பட்டிலர் ஆதலின் அக்கூறிய சிலப்பதிகாரக்கூற்றுப் பொய்யாகுமென்று விலக்குவாருமுண்டோ?

கண்ணகியம்மை சுவர்க்கம்புக்க மாசத்திலே மாதரியும் இறந்துபோயினள். மாசாத்துவான், மாநாய்கன் என்னும் இவர்கள் துறவும், இன்னவர்தம் மனைவியரிறப்பும், மாதவி பிக்குணிசங்கத்தைச்சார்ந்து நால்வகை வாய்மை ஐம்பெரொழுக்க முதலாயவற்றைக் கைக்கோடலும் ஆகியஇவையெல்லாம் அதற்கடுத்த புரட்டாதித்திங்களிலே நடந்திருப்பவும் கண்ணகியம்மை சுவர்க்கம்புக்கு இருபத்தைந்தாந்திங்களிலும் அறுபதாந்திங்களிலும் இவற்றையெல்லாம் எடுத்துரைத்தற்கிருந்த காரணந்தானென்னை?

(தொடரும்)

நவநீதகிருஷ்ணபாரதி.

தமிழ்ப்பரீக்ஷை விளம்பரம்.

—:(o):—

தமிழ்நாட்டுள் அரசுரிமையும், தமிழபிமானமும் பூண்டுவிளங்கும் புதுக்கோட்டை ராஜஸ்தானத்தின் மகா-ா-ா-ஸ்ரீ ரீஜெண்டு ஸாஹேப் அவர்கள் இத்தமிழ்நாட்டில் தமிழ்ப்பயிற்சிகுன்றாது வளர்ச்சியடையும் பொருட்டு வருடந்தோறும் நவராத்திரிகாலத்தில் தமிழ்ப்பரீக்ஷை நடத்தித்தேர்ச்சிபெறுமவர்க்குத்தகுதியானபரிசும் யோக்கியதாபத்திர முமளித்துவரும்படி யேற்பாடுகள் செய்யக் கருணைகூர்ந்து கட்டளை யிட்டிருப்பது நம்தமிழ்ச்சங்கத்தாருக்கெல்லாம் மிகுந்தசந்தோஷத்தை விளைவிக்கின்றது.

இப்பரீக்ஷைக்குச்செல்லுமவர்களெல்லோரும் முதலில் அவசியம் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயங்களடங்கிய விளம்பரமொன்று புதுக்கோட்டை மகா-ா-ா-ஸ்ரீ திவானவர்களால் வெளியிடப்பெற்றிருக் கிறது. அதனை நம் நேயர்களெல்லோரும் அறிந்துகொள்ளற்குபகார மாகும்படி பின்வருமாறு காட்டலாயிற்று.

ா-திவான் அவர்களால் விளம்பரம்.

—(o)—

தமிழ்ப்படிப்பை அபிவிர்த்திசெய்யும்பொருட்டுத் தமிழ்வித்யார்த்தி களுக்குப்பிரதிவருஷமும் தமிழில் பரீக்ஷை ஒன்று எற்பாடு செய்யும்படி மஹா-ா-ா-ஸ்ரீ ரீஜெண்ட் ஸாஹேப் அவர்கள் களிகூர்ந்து ஆக்ஞாபித் திருக்கிறார்கள். இப்பரீக்ஷை சமஸ்கிருத வித்யார்த்திகளுக்கு நடக்கும் பரீக்ஷையைப்போல் ஒவ்வொரு வருஷமும் நவராத்திரியில் நடத்தப் படும். தேறின மாணாக்கர்களுக்குத் தகுந்த பணப்பரிசு அளிப்பதுடன் தேர்ச்சியின் திறமையைக்காண்பிக்கும் யோக்யதாபத்திரங்களும் அளிக்கப்படும். பல மெம்பர்கள்அடங்கியசபையினால் மேற்படி பரீக்ஷை நடத்தப்படும். பிராமணரல்லாதவர்களும் பரீக்ஷைக்கு வரலாம். பரீக்ஷை அநேகமாய் எழுத்துமூலமாய் நடத்தப்படும்.

பரீக்ஷை நடக்கும் சமயம் பரீக்ஷை செய்யும் இடம், இன்னும் மற்ற விஷயங்களைக்குறித்து விவரமான விளம்பரம் பின்னடிப்பிரசுரிக்கப்படும்.

2. 1924-ம் வருஷத்துப் பரீக்ஷை சபையின் மெம்பர்கள்.

ஈ-திவான் அவர்கள்—அக்கிராசனாதிபதி.

1. மகிபாலம்பட்டி வித்வான் ஸ்ரீமான் கதிரேசன் செட்டியார் அவர்கள் .... மெம்பர்.

2. பிர்ம்மஸ்ரீ B. V. காமேசுவர ஐய்யர் அவர்கள், எம். ஏ. .... ,,

3. பிர்ம்மஸ்ரீ ஆர். சுந்தராச்சாரியார் அவர்கள், காலேஜ் பென்ஷன் தமிழ் பண்டிட். ,,

4. பிர்ம்மஸ்ரீ வி. டி. ஸ்ரீனிவாச அய்யங்கார் அவர்கள், காலேஜ் தலைமைத் தமிழ் பண்டிதர் .... மெம்பர் & காரியதரிசி.

3. அடியிற்கண்ட பாடங்களில் பரீக்ஷை நடத்தப்படும்.

I. இலக்கணம்.

1. (1) நன்னூல் விருத்தியுரை.
   (2) தொல்காப்பியச் சூத்திரவிருத்தி.
   (3) தொல்காப்பியம் பொருள் அதிகாரம்.
   (4) இறையனார் அகப்பொருளுரை.

2. (1) யாப்பருங்கலவிருத்தி.
   (2) மாறனலங்காரம்.
   (3) நேமிநாதம் (உரையுடன்).
   (4) இலக்கண விளக்கச் சூறாவளி.

II. இலக்கியம்.

1. (1) கம்பராமாயணம்-கிஷ்கிந்தாகாண்டம் & சுந்தரகாண்டம்
   (2) பெரியபுராணம் முதல் 500 செய்யுள்.
   (3) திணைமாலை நூற்றைம்பது.
   (4) பெரியதிருமொழி 1 முதல் 100 வரை.

(5) தேவாரம் பண்முறை அப்பர் திரு நேரிசை.

(6) திருக்கோவையார் 1 முதல் 100.

2. (1) சிந்தாமணி முதல் இரண்டு இலம்பகம்.

(2) திருக்குறள் பரிமேலழகர் உரையுடன்.

(3) கலித்தொகை (பாலைக்கலி மருதக்கலி).

(4) புறநானூறு (முதல் நூறு செய்யுள்).

(5) பரிபாடல் முதல் 10 பாட்டு.

III. வசனம்.

(1) கடைபெழுவள்ளல் காலம் (2) சோழவம்ச சரித்திரம்.

IV. வியாசம்.

கொடுத்த விஷயத்தை விரித்து எழுதல்.

V. செய்யுள் இயற்றல்.

நான்கு பாக்களும்—கொடுத்த விஷயத்தை அமைத்துப்பாடல்.

4. வருகிற நவராத்திரியில் நடைபெறும் தமிழ் வித்வத் பரீக்ஷைக்கு ஆஜராகப் பிரியமுள்ள மாணுக்கர்கள் 1924-ம் வருஷம் ஆகஸ்டு மீ 15௳க்கு முன் பிரிஸிடெண்டுக்கு (புதுக்கோட்டை ஸ்டேட்டு ா-திவான் அவர்களுக்கு) வந்து சேரும்படி தங்களுடைய விண்ணப்பங்களை அனுப்பவேண்டும்.

5. ஒவ்வொரு பாடத்திலும் 100-க்கு 40 வீதமும், மொத்தத்தில் 100-க்கு 50 வீதமும் மார்க்கும் வாங்கத்தவறுகிற மாணுக்கர்கள் பரீக்ஷை தேறினவர்களாக அங்கீகரிக்கப்படமாட்டார்கள்.

P. K. KUNHUNNI MENON,

3—7—24. *Dewan.*

நாவடக்கம்.

247. ஆக்கப் படுக்கு மருந்தனைவாய்ப் பெய்விக்கும்
போக்கப் படுக்கும் புலைநரகத் துய்ப்பிக்கும்
காக்கப் படுவன விந்திரிய மைந்தினும்
நாக்கல்ல தில்லை நனிவெல்லு மாறே.

248. கல்லாதார் வாயிற் கடுஞ்சொல்லாங் காரரவு
நல்லாரைச் சென்று நனிகடிக்குஞ்—சொல்லாலோர்
மந்திரமு மில்லை மகிதலத்தே மற்றுமொரு
தந்திரமு மில்லையதன் சால்பு.

249. வெறியுறு கழற்கண்ணி வேந்தர்கட் காயினும்
உறவுற [1]வருவன வுரைப்பன வுரைப்பன்மற்
செறிவுறு [2]தொழிலினர் சிறந்தவ ரிவர்நமக்
கறிவுறு தொழிலரென் றல்லவை சொல்லன்மின்
பிறபிற நிகழ்வன பின்.

250. கெட்டகமு தைக்குரல தென்பர்குயில் கூவின்
நட்டவர்கள் போன்மகிழ்வர் நண்பதனு டென்னை
பட்டபொருள் சொல்லலுற லுண்டெனினும் யாரும்
வெட்டென வுரைத்தலை விடுத்திடுதி னென்றான்.

பெரியோர்.

251. நிற்பவே நிற்பவே நிர்பவே நிற்பவே
செந்நெறிக் கண்ணும் புகழ்க்கண்ணுஞ் சால்பினும்
மெய்ந்நெறிக் கண்ணும்வாழ் வார்.

252. காதன் மதியங் களங்கமுடைத் தானாலும்
பூதலத்தை யெல்லாம் பொலிவிக்கும்—ஓதுசில
குற்ற முடையா ரெனினுங் குவலயத்துள்
நற்றகையார் நல்லரென்றே நாடு.

253. பெரியோ ருழையும் பிழைசிறிதுண் டாயின்
இருநிலத்தில் யாரு மறிதல்—தெரிவிக்கும்
தேக்குங் கடலுலகில் யாவர்க்குந் தெள்ளமுதம்
வாக்கு மதிமேன் மறு.

(247) வளையாபதி (புறத்). (248) வீரசோ. அலங். 23. மேற். (249) யாப். வி. 67; யாப். கா. செய். 7 மேற்; இலக். வி. 731 மேற். [1]வரும்வழி. [2]தகையினர். (250) நீலகேசி. மேற். (251) ஷை. 51. (252) வீரசோ. அலங். 20 உரை. (253) ஷை ஷை. 33 உரை; தண்டி. 83, மேற். இலக். வி. 678.

254. எண்ணும் பயன்றூக்கா தியார்க்கும் வரையாது
மண்ணுலகில் வாம னருள்வளர்க்குந்—தண்ணறுந்தேன்
பூத்தளிக்குந் தாராய் புகழாளர்க் கெவ்வுயிருங்
காத்தளிக்கை யன்றோ கடன்.

பெரியோர் சிறியோர் இயல்புகள்.

255. உலகினுட்,
பெருந்தகையார் பெருந்தகைமை [1]பிறழாவே பிறழினும்
இருந்தகைய [2]விறுவரைமே லெரிபோலச் சுடர்விடுமே
சிறுதகையார் சிறுதகைமை [3]சிறப்பென்றும் பிறழ்வின்றி
[4]புறதகைய வுலகிற்கோ ரொப்பாகித் தோன்றாவே.

256. சொல்லாம லேபெரியர் சொல்லிச் சிறியர்செய்வர்
சொல்லியுஞ் செய்யார் கயவரே—நல்ல
குலாமாலை வேற்கண்ணாய் கூறுவமை நாடிற்
பலாமாவைப் பாதிரியைப் பார்.

257. பசுப்போல்வார் முற்பட்டாற் பாற்பட்ட சான்றோர்
முசுப்போல முள்காந் திருப்பார்—பசுத்தான்
வெருளினு மெல்லாம் வெருளுமஃ தன்றி
மருளினு மெல்லா மருண்ம்.

258. எற்றே கொடிமுல்லை தன்னை வளர்த்தெடுத்த
முற்றிழையாள் வாட முறுவலிக்கும்—[1]முற்றும்
முடியாப் பரவை முழங்குலகத் தென்றுங்
கொடியார்க்கு முண்டோ குணம்.

259. ஆலைப் பலாவாக்க லாமோ வருஞ்சுணங்கன்
வாலை நிமிர்க்க வசமாமோ—நீலநிறக்
காக்கைதனைப் பேசுவிக்க லாமோ கருணையிலா
மூர்க்கரைச்சீ ராக்கலா மோ.

260. குரங்கனலில் வீழ்ந்துவெறி கொண்டுதேள் கொட்டக்
காஞ்செறியப் பாம்பலவன் கவ்வ—விரைந்துபேய்

---

(254) வீரசோ. அலங். 20 உரை; தண்டி. 47; இலச். வி. 651. (255) யாப். வி. 94; வீரசோ. யாப். 13 உரை; யாப். கா. ஒழி. 8 மேற். [1]பிறழாரே. [2]விருவரைமே. [3]சிறப்பெனினும் [4]உறுதகைமை பிழைப்பினும் (எ.பா.) (256) ஔவைவாக்கென்பர். (257) நன். 95 மயிலைநாதருரை. (258) வீரசோ. அலங். 20 உரை; தண்டி. 47 உரை. [1]முற்ற (260) 'காளமேகப்புலவர்வாக் கென்பர்.

பற்றவே கள்ளுண்டு பச்சைமிள கைக்கடித்தால்
எத்தனைபார் சேட்டைக் கிடம்.

261. ஞானம் பெருமை நயங்கருணை யுண்மையபி
மானம் பொறுமை வணக்கமுயர்—தானமுடன்
சற்குணமா சாரந் தருங்கல்வி நீதிநெறி
துற்குணருக் கில்லையென்றே சொல்.

தத்துவப்பிரகாசர்பாட்டு.

262. குரங்குமாய் நண்டுகெட்டித் தேளுங் கொட்டிக்
குடியாத மதுக்குடித்துப் பேயு மேறி
இரங்கவருங் காஞ்சொறியின் பொடியுந் தூவி
யிஞ்சிதின்று கொள்ளிபிடித் [1]தெழுந்தாற் போலத்
தருங்கருணை யில்லாத புல்லர் வாழ்விற்
றண்டிகையின் மீதேறிச் சம்பத் தேறிக்
கருங்கைமதக் களிறேறிக் கழுவி லேறிக்
காடேறி நாடேறித் திரிவார் கண்டீர்.

263. பாம்புகடித் தாலதுவு மீட்க வல்லோம்
பசாசறைந்தா னீறிட்டுப் பார்க்க வல்லோம்
வேம்புகசப் பறக்கறியு மாக்க வல்லோம்
விறல்வேழத் ததிகமதந் தணிக்க வல்லோம்
சாம்பொழுது திடமாகப் பேச வல்லோம்
தாணியின்மேற் கல்லாத தொன்று மில்லை
தீம்பரைநல் லவராக்கிக் [2]குணமுண் டாக்குந்
திறமறியா தேநின்று திகைக்கின் றேமே.

அறிவின்மை.

264. கல்லார்க் கினிய வுரைத்தலுங் கைக்கொண்ட
வில்லாளைக் கோலாற் புடைத்தலும்—இல்லஞ்
சிறியாரைக் கொண்டு புகலுமிம் மூன்றும்
அறியாமை யான்வருங் கேடு.

265. அந்தக னந்தகற் காறுசொலல் யாதொக்கும்
முந்துசெய் குற்றங் கெடுப்பான் முழுவதும்
நன்கறி வில்லா னறிவறி யாதவற்
கின்புறு வீட்டி னெறிசொல்லு மாறே.

---

(261) அருணாசலக்கவிராயர்வாக்கென்பர் (தமிழ்ப் புல. ச. பக். 20) (262, 263) தமிழ்நா. 235, 236. [1]எரிந்தாற் போலத். [2]குணமுண் டாக்கத் திறமதறி யாமனின்று. (264) தஞ்சைச் சரச்சுவதிமாலிலுள்ள பிரதியொன் றிற் கண்ட பாடல். (265) வளையாபதி (புறத்.)

நல்குரவு.

266. பெண்டிர் மதியார் பெருங்கிளை தானது
கொண்டுவீ ருகா குறிப்பி னஃகுப
வெண்டறை நின்று வெறுக்கை யிலராயின்
மண்டினர் போல்வர்த மக்களு மொட்டார்.

267. சொல்லவை சொல்லார் சுருங்குபு சூழ்ந்துணர்
நல்லவை யாரு நனிமதிப் பாரல்லர்
கல்வியுங் கைப்பொரு ளில்லார் பயிற்றிய
புல்லென்று போதலே மெய்யென்று கொண்ணீ.

268. தொழுமக னாயினுந் துற்றுடை யானைப்
பழுமரஞ் சூழ்ந்த பறவையிற் சூழ்ப
விழுமிய ரேனும் வெறுக்கை யுலந்தாற்
பழுமரம் வீழ்ந்த பறவையிற் போப.

269. பொருளில் குலனும் பொறுமையி னோன்பும்
அருளி லறனு மமைச்சி லரசும்
இருளினு ளிட்ட விருண்மயி ரொன்றே
மருளில் புலவர் மனங்கொண் டுரைப்ப.

ஔவையார் பாட்டு.

270. உடையரா யச் சென்றக்கா லூரெல்லாஞ் சுற்றம்
முடவராய்க் கோலூன்றிச் சென்றக்காற் சுற்றம்
[1]உடையானும் வேறு படும்.

271. [1]கவிகற் றவர்க்குங் கணிகற் றவர்க்குங்கம் மாளருக்கும்
ஓவிகற் றவர்க்கு முவாத்தி களுக்கு முயர்ந்தமட்டுங்
குவிவைக்கு மொட்டர்க்குங் கூத்தாடி கட்குங் குருக்களுக்கும்
இவரெட்டுப் பேர்கட்கு நீங்காத் தரித்திர மென்றைக்குமே.

(266–269) வளையாபதி (புறத்). (270) யாப். வி. 93; [1]உடைவயிறும். (271) தனிப்பா. [1]கவிகற்ற பேர்க்குங் கணிதங்கற் றோர்க்குங்கம் மாளருக்குங், குவி கட்டு மொட்டர்க்குங் கூத்தாடி கட்குங் குருக்களுக்கு, மவியுற்ற யோகிக்கும் வாத்திமை யோர்க்கும்வண் ணார்களுக்கும், இவரெட்டுப் பேருக்கும் வெய்ய தரித்திர மெய்திடுமே (செந்தமிழ். தொ. 22, பக். 58, 59)

272. கருங்கட லுடுத்த மல்லன் ஞாலத்துச்
செம்மையின் வழாஅது கொடைக்கடம் பூண்டு
வாழ்வது பொருந்தா தாகிற்
சாவது மினிதவர் வீவது முறுமே.

273. உவர்க்கட லன்ன செல்வரு முளரே
கிணற்றூற் றன்ன நீயுமா ருளையே
செல்வர்தாம் பெருந்திரு வுறுக பல்பகல்
நீவா ழியரோ நெடிதே யியாச்
சிறுவிலைக் காலத் தானு
முறுபொரு டந்தெஞ் சொற்கொள் வோயே.

274. மின்னுந் தமனியமும் வெற்றிரும்பு [1]மோரினமாய்ப்
பொன்னின் பெயர்படைத்தாற் போலாதே—கொன்னே
ஒளிப்பாரு மக்களா யொல்லுவ தாங்கே
யளிப்பாரு மக்களா மாறு.

275. சித்திரமுங் கைப்பழக்கஞ் செந்தமிழு நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்க—நித்தம்
நடையு நடைப்பழக்க நட்புந் தயையுங்
கொடையும் பிறவிக் குணம்.

276. ஆர்த்தசபை நூற்றொருவ ராயிரத்தொன் றாம்புலவர்
வார்த்தை பதிநா யிரத்தொருவர்—பூத்தமலர்த்
தண்டா மரைத்திருவே தாதாகோ டிக்கொருவர்
உண்டாயி னுண்டென் றறு.

277. சிறுநன்றி யின்றிவர்க்கியாஞ் செய்தக்கா லேனைப்
பெறுநன்றி [1]மன்னும் பெரிதென்—றுறுநன்றி
தானவாய்ச் செய்வதூஉந் தானமன் றென்பவே
வானவா முள்ளத் தவர்.

278. துற்றன வாகத் தொகுத்து விரல்வைத்த
தெற்றுக்கலை தென்னி னிதுவதன் காரணம்
அற்றமி லூன மெனைப்பல வாயினுந்
துற்றவி ழொவ்வாத் துணிவென்னு மாறே.

---

(272) யாப். வி. 53. (273) நன். 268 மயிலைநாதருரை; [தஞ்சைச் சரச்சுவதிமால் எட்டுப்பிரதி யொன்றில் ஒருபாட்டாகக் காணப்படுகின்றது]. (274) பெரும்பொருள்விளக்கம் (புறத்; தொல். பொ. 90. நச்.) [1]மொன்றாகிப். (276) ஔவைவாக்கென்பர். (277) யாப். வி. 4, 95; யாப். கா. ஒழி. 1 மேற். [1]பின்னும். (278) வளையாபதி (புறத்).

279. ஈட்டிய தெல்லா மிதன்பொருட் [1]டென்பது
காட்டிய கைவண்மை காட்டினர்—வேட்டொறுங்
காமருதார்ச் சென்னி கடல்சூழ் புகார்வணிகர்
தாமரையுஞ் சங்கும்போற் றந்து.

ஈயாமை.

280. இறைத்தொறு மிறைத்தொறு மணற்கிணற்றிற் சுருங்காது
பன்னா ணிற்பினும் புண்ணடையின் மிகாஅது
இரப்போர்க் கீயுங் கடனறி வாளர்
கையோ முடங்கக் கண்டது மிலையால்
ஈயா மாந்த ரீட்டிய பெரும்பொருள்
பாரி பறம்பிற் பனிவரை போல
உயரக் கண்டது மிலையா லறனறிந்
தற்றோர்க் குதவா னுயிற்
கற்றோர் விச்சையொடு கல்லா னுயிற்
இளமுலை மாத ரின்னகைச் செவ்விக்
கலவி யின்பங் கலவா னுயின்
விருந்துற வருந்தா னுயின்
மருந்தோ வாழ்க்கை மாநிலத் தோர்க்கே.

281. சுற்றுங் கருங்குளவி சூரைத்தூ றிரியப்பே
யெற்றுஞ் சுடுகாட் டிடிகரையின்—புற்றில்
வளர்ந்த மடற்பனைக்குள் வைத்ததே னெக்குந்
தளர்ந்தோர்க்கொன் றீயார் தனம்.

ஔவை பாடல்கள்.

282. கருங்குளவிச் சூரைத்தூற் றீச்சங் கனிபோல்
வருந்தினர்க்கொன் றீயாதான் வாழ்க்கை—யரும்பகலே
இச்சித் திருந்தபொரு டாயத்தார் கொள்வரே
எற்றேமற் றெற்றேமற் றெற்று.

283. தண்டாம லீவது தாளாண்மை தண்டி
அடுத்தக்கா லீவது வண்மை யடுத்தடுத்துப்
பின்சென்று லீவது காற்கூலி பின்சென்றும்
பொய்த்தா னிவனென்று போமே லவன்குடி
எச்ச மிறுமே விறு.

---

(279) பெரும்பொருள்விளக்கம். (புறத்; தொல். பொரு. 75 நச்.) [1]டென்பதே. (280) தஞ்சைச் சரச்சுவதிமால் வீட்டுப்பிரதியொன்றிற்கண்ட பாடல்; (281-282) ஔவைவாக்கென்பர் (தனிப்பா.) (283) தமிழ் நா. 33.

284. பாடல் பெறுனேற் பலர்மெச்ச வாழானேல்
நாடறிய நன்மணங்க ளுடானேற்—சேட
னிவன்வாழும் வாழ்க்கை யிருங்கடல்சூழ் பாரிற்
கவிழ்ந்தென் மலர்ந்தென்னை காண்.

285. நம்ப னடியவர்க்கு நல்காத் திரவியங்கள்
பம்புக்காம் பேய்க்காம் பரத்தையர்க்காம்—வம்புக்காங்
கொள்ளைக்காங் கள்ளுக்காங் கோவுக்காஞ் சாவுக்காங்
கள்ளர்க்காந் தீக்காகுங் காண்.

இரட்டையர்வாக்கு.

286. கண்ணாடி காட்டுங் களிறுஞ் சுரைப்பழத்தின்
உண்ணாடிப் புக்க வுறுபொருளு—மண்ணா
கனங்குறைந்த வாறென் கயவர்பாற் சென்று
தினந்தெரிந்த வாறெனவே செப்பு.

287. வெள்ளிலைவே லற்பநிழன் மெத்தவே முட்டைக்குந்
துள்ளுநரூ வாழைபலாச் சோலைக்குள்—மெள்ள
அடுக்கவொட்டா வாறுபோ லற்பர்சிலர் கூடிக்
கொடுக்கவொட்டார் தாமுங் கொடார்.

288. கல்லா லயமாந் தேவருமாங் கழுதை கசடர் பொதிசுமக்குங்
கடாவோ வுழுது பயிரிடற்காங் கட்டம் பன்றிக் கிரையாகும்
புல்லே நீசர் வாகனமாம் பொதியுஞ் சுமக்கும் பிணமெனிலோ
பூசி முடிந்து மறையோர்க்குப் பொருளு மீந்து புகழெய்தும்
மல்லார் குட்டிச் சுவரெனிலோ மாடு முரைஞ்சு மறைவாகும்
மதியாத் துடைப்பந் தானெனிலோ மாட கூடந் தனைவிளக்கும்
அல்லா துலுத்தன் றனக்கிணையா யாரை யுரைப்பன் புவிமீதில்
அவனைக் குறித்துக் கூறுமிடத் தவனுக் கவனே யிணையாமே.

ஏற்றல்.

289. நிலம்பொறை யாற்று நிதிபல கொண்டுங்
குலம்பெறுதீங் கந்தணர் கொள்ளார்—நலங்கிளர்
தீவா யவிசொரியத் தீவிளங்கு மாறுபோற்
றூவா தொளிசிறந்தார் தாம்.

(284, 285) ஔவை வாக்கென்பர். (286) செந்தமிழ். 4, 180: (287) ஷெ. 3, 481. (288) இராமசந்திரகவிராயர் வாக்கென்பர். (289) பெரும்பொருள்விளக்கம் (புறத்; தொல், பொருளதி, 75.)

நன்றிமறவாமை.

290. முன்னொருவன் செய்யு முபகார மூவுலகந்
தன்னைக் கொடுத்தாலுஞ் சாலுமே—யென்னே
உயிர்க்குறுதி யாக வொருவர்சோ றுண்டார்
பிறர்க்குரிய ராவரோ பேசு.

புகழ்.

(இரண்டு திருக்குறளிணைந்த பாட்டு).

291. எய்தற் கரிய வியன்றக்கா லந்நிலையே
செய்தற் கரிய செயலென்று—வையகத்
தீத விசைபட வாழ்த லதுவல்ல
தூதிய மில்லை யுயிர்க்கு.

292. வெய்ய குரற்றோன்றி வெஞ்சினவே றுட்கொளினும்
பெய்யு [1]மழைமுகிலைப் பேணுவரால்—வையத்
திருள்பொழியுங் குற்றம் [2]பலவெனினும் யார்க்கும்
பொருள்பொழிவார் மேற்றே புகழ்.

293. கல்லார் நாவிற் கட்டுரை கொள்வார்—புகழெய்தார்
புல்லார் வாயிற் சொற்றெளி வுற்றார்—புகழெய்தார்
நல்லார் மேவு நண்பு துறந்தார்—புகழெய்தார்
இல்லா ராய்நின் றின்ப முவந்தார்—புகழெய்தார்.

நிலையாமை.

294. நெருந லென்பது சென்றது நின்ற
வின்றுஞ் செல்லா நின்றமுன் சென்று
வருநாள் கண்டவர் யாரே யதனால்
ஒருநா ளகப்படுத் துடையோ ரின்மையின்
இல்லது நாடுமி னுள்ளது கொடுமின்
வாழ்வி லின்பமும் புணர்மி னஃதான்று
கீழது நீரகம் புகினு மேலது
விசும்பின் பிடர்த்தலை யேறினும் புடைபது
கேமி மால்வரைக் கப்புறம் புகினும்
கோள்வாய்த்துக் கொட்குங் கூற்றத்து
வீளிக் கொடுகோ விலக்குதற் கரிதே

(290) பாரதவெண்பா. (291) யாப். வி. 60. (292) வீரசோ. அலங். 20; தண்டி 47; இலக். வி. 651. [1]முகிறன்னைபு. [2]பலவரினும், இருப்பினும். (293) வீரசோ. யாப். 15, மேற். (294) ஆசிரியமாலை (புறத்.)

295. பலமுறையு மோம்பப் படுவன கேண்மின்
சொலன்முறைக்கட் டோன்றிச் சுடர்மணித்தே ரூர்ந்து
நிலமுறையி னாண்ட நிகரிலார் மாட்டுஞ்
சிலமுறை யல்லது செல்வங்க ளில்லா
விலங்கு மெறிபடையு மாற்றலு [1]மாண்புங்
கலந்ததங் கல்வியுந் தோற்றமு மேனைப்
பொலஞ்செய் புனைகலனு டிவ்வாற னாலும்
விலங்கிவருங் கூற்றை விலக்கலு மாகா
அனைத்தாத லீயிருங் காண்டிர் நினைத்தகக்
கூறிய வெம்மொழி பிழையாது
தேறினீ ரொழுகிற் சென்றுபயன் றருமே.

296. பரவை மாக்கடற் [2]றொகுதிரை வரவும்
பண்டைச் [3]செய்தி யின்றிவண் வரவும்
பகற்பின் முட்டா திரவினது வரவும்
பசியு மார்கையும் வரவும்
பரியினும் போகா துவப்பினும் வருமே.

297. இளமையு நிலையாவா லின்பமு நின்றவல்ல
வளமையு மஃதேயால் வைகலுந் துன்பவெள்ளம்
உளவென நினையாதே செல்கதிக் கென்றுமென்றும்
விளைநில முழுவார்போல் வித்துநீர் செய்துகொண்மின்.

298. கண்டார் காணு வுலகத்தே காதல் செய்து நில்லாதே
பண்டே பரமன் படைத்தநாட் பார்த்து நின்று நையாதே
தண்டா மூப்பு வந்துன்னைத் தளரச் செய்து நில்லாமுன்
உண்டே லுண்டு மிக்கதில் வுலகம் மறிய வைம்மினே.

299. நில்லாது செல்வ நிலவா ருடம்படைந்தார்
செல்லா ரொருங்கென்று சிந்தித்து—[4]நல்லார்
அருளுளம் புரிகுவ ராயி
னிருளறு சிவகதி யெய்தலோ வெளிதே.

300. அந்தரத் துள்ளே யகங்கை புறங்கையா
[5]மந்தரம் போலு மனைவாழ்க்கை—[6]அந்தரத்து
வாழ்கின்றே மென்று மகிழன்மின் வானூர்ந்து
போகின்ற பூளையே போன்று.

(295) யாப். வி 55.; யாப். கா. செய். 15. மேற். [1]அன்பும். (296) யாப். வி. 40, 53. [2]படுதிரை. [3]செய்தியினின்றிவண். (297) விளையாபதி (புறத்.) (298) திருவெள்ளறைச் சாஸனப்பாடல் (செந்தமிழ். 4. 399). (299) யாப்; வி. 55. [4]நல்லவ ருள்ளம் புரிகுவ. (300) வீரசோ. யாப். 5; யாப். வி. 37. யாப். கா. ஒழி. 6. மேற்; [5]மந்தரமே. [6]மந்தரத்து.

301. கல்வியா னல்லனே காமாதி யாற்றீயன்
செல்வத் தயர்ந்தான் குலத்தினிற் றாழ்ந்தனனும்
வல்லுவா னென்றொன்று வல்லா னிதுவன்றோ
நில்லாமை நித்த நிலை.

யாக்கை நிலையாமை.

302. யாணர் வரவின் மேனா ளீங்கிவன்
இளமைச் செவ்வி நயந்த பேதையர்
காத லுண்கண் வருபனி நீங்கி
இன்னுந் துயில்கொண் டிலவே யின்றிவன்
போர்வை பசையற வுணங்கிப் பாணர்
பழந்தலைச் சீறியாழ் போலக் குரலழிந்து
நரம்புமடித் தியாத்த யாக்கை மூப்புறப்
பதிகெழு மூதூர் மன்றத்துப்
பொதியிற் புறஞ்சிறைச் சார்ந்தனன் மன்னே.

303. உள்ளது காக்குமிக் கள்ள யாக்கை
மேம்படு குற்ற மூன்றொடு வழங்கலின்
உண்டி நல்லரசு தண்டத்தின் வகுத்த
நோன்பிணி யகப்பட் டிருப்பினும்
தோன்றுவது பின்னர்க் காப்பது முன்னே.

304. நீல நிறத்தனவாய் நெய்கனிந்து போதவிழ்ந்து
கோலங் குயின்ற குழல்வாழி நெஞ்சே
கோலங் குயின்ற குழலுங் கொழுஞ்சிகையும்
காலக் கனலெரியின் வேம்வாழி நெஞ்சே
காலக் கனலெரியின் வேவன கண்டாலும்
சால மயங்குவ தென்வாழி நெஞ்சே.

305. வேற்கண் மடவார் விழைவொழிய யாம்விழையக்
கோற்க ணெறிகாட்டக் கொல்கூற் றுழையதா
நாற்ப திகந்தா னரைத்தூது வந்ததினி
நீத்த றுணிவா நிலையா திளமையே.

306. கழிந்த திளமை கனிமயக்கந் தீர்ந்த
தொழிந்தது காதன்மே லூக்கந் — கழிந்து
கருநெறியுங் கூந்தலார் காதனோய் தீர்ந்த
தொருநெறியே சேர்ந்த துளம்.

(301) நீலகேசி. மொக்கல. 113, சமயதிவாகரவுரை. (302, 303) ஆசிரிய மாலை (புறத்.) (304) வளையாபதி; யாப். வி. 93. (305) வளையாபதி (புறத்), (306) வீரசோ. அலங். 26 உரை; தண்டி. 6 உரை.

307. நன்மெனை நாறுமி தென்றிவ்
　　வுடம்பு நயக்கின்ற தாயின்
ஒன்பது வாயில்க டோறு
　　முண்ணின் றழுக்குச் சொரியத்
தின்பதோர் நாயு மிழுப்பத்
　　திசைதொறுஞ் சிப்பில்கு போழ்தின்
இன்பநன் ஞற்ற மிதன்க
　　ணெவ்வகை யாற்கொள்ள லாமே.

308. உறுப்புக்க டாமுடன் கூடி
　　யொன்று யியைந்த பெரும்பை
மறைப்பின் விழைவிற்குச் சார்வாய்
　　மக்குவ தேலிவ் வுறுப்புக்
குறைத்தன போல வழுகிக்
　　குறைந்து குறைந்து சொரிய
வெறுப்பிற் கிடந்த பொழுதின்
　　வேண்டப் படுவது முண்டோ.

செல்வநிலையாமை.

309. அரையது துகிலே மார்பின தார
முடியது முருகு நாறுந் தொடையல்
புடையன பால்வெண் கவரியின் கற்றை
மேலது, மாலை தாழ்ந்த மணிக்காற் றனிக்குடை
முன்னது முரசு முழங்குந் தானை
இங்கிலை யினைய செல்வத் தீங்கிவர்
யாவ ரேயோ தேவ ரல்லர்
இமைப்பதுஞ் செய்தனர் மாக்க ளேயென
மயக்க நீங்கத் களிற்றுமிசை வந்தனர்
நெருந லின்றிவர் பசிப்பிணி காய்தலின்
உணங்கிய துணியு முடுத்து
மாசுமீப் போர்த்த யாக்கையொடு
தாமே யொருசிறை யிருந்தனர் மன்னே.

310. வித்தகர் செய்த விளங்கு முடிகவித்தார்
மத்தக மாண்பழிதல் காண்வாழி நெஞ்சே
மத்தக மாண்பழிதல் கண்டான் மயங்காதே

(307, 308) குண்டலகேசி (புறத்.) (309) ஆசிரியமாலை(புறத்). (310) வளையாபதி (யாப். வி. 93)

உத்தம நன்னெறிக்க ணில்வாழி நெஞ்சே
உத்தம நன்னெறிக்க ணின்றாக்கஞ் செய்தியேற்
சித்தி படர்த றெளிவாழி நெஞ்சே.

311. வெள்ள மறவி விறல்வேந்தர் தீத்தாயங்
கள்வரென் றிவ்வாற்றிற் கைகரப்பத் தீர்ந்தகலும்
உள்ளி னுறுபொருளை யொட்டா தொழிந்தவர்
எள்ளும் பெருந்துயர்நோ யெவ்வ மிகப்பவே.

312. ஒழிந்த பிறவற முண்டென்பா ருட்க
வழிந்து பிறரவாம் வம்பப் பொருளை
இழந்து சிறிதானு மெய்தா தொழிந்தார்
அழிந்து பெருந்துயர்நோய்க் கல்லாப் பவரே.

313. இன்மை யிழிவா முடைமை யுயிர்க்கச்சம்
மன்னல் சிறிதாய் மயக்கம் பெரிதாகிப்
புன்மை யுறுக்கும் புரையி லரும்பொருளைத்
துன்னா தொழிந்தார் துறவோ விழுமிதே.

314. ஈண்ட லரிதாய்க் கெடுத லெளிதாகி
நாண்டல் சிறிதாய் நடுக்கம் பலதருஉம்
மாண்பி லியற்கை மருவி லரும்பொருளை
வேண்டா தொழிந்தார் விறலோ விழுமிதே.

315. இல்லெனின் வாழ்க்கையு மில்லையுண் டாய்விடிற்
கொல்வர் கயவர் கொலப்பட்டும் வீடுவர்
இல்லையுண் டாய்விடி னிம்மை மறுமைக்கும்
புல்லென்று காட்டும் புணர்வது மன்றே.

அருளுடைமை.

316. ஆற்று மின்னரு ளாருயிர் மாட்டெலாம்
தூற்று மின்னறந் தோகனி துன்னன்மின்
மாற்று மின்கழி யாயமு மானமும்
போற்று மின்பொரு ளாவிவை கொண்டுநீர்.

317. பொருளைப் பொருளாப் பொதிந்தோம்பல் செய்பா
தருளைப் பொருளா வறஞ்செய்தல் வேண்டும்
அருளைப் பொருளா வறஞ்செய்து வான்கண்
இருளிலியல் பெய்தாத தென்னோ நமர்காள்.

(311-317) வளையாபதி (புறத).

கொல்லாமை.

318. எஃஃகி லிலங்கிய கையரா யின்னுயிர்
வெஃஃகு வார்க்கில்லை வீடு.

319. இந்நோய் நமக்குண்டென் றெண்ணாதே யெவ்வுயிரும்
முன்னேவக் கொன்றுண்ணு மூர்க்கர்தாம்—எந்நோவும்
பண்ணப் படுநரகிற் பாவிகளிற் பாவிகளென்
றெண்ணப் படுவ ரிசைந்து.

320. தகா துயிர்கொல் வானின் மிகாமையில்லை பாவம்
அவாவிலையி லுண்பான் புலால்பெருகல் வேண்டும்
புகாவலை விலங்காய்ப் பொருதுபிற வூன்கொன்
றவாவிலையில் விற்பானு மாண்டருகல் வேண்டும்.

321. பிறவிக் கடலகத் தாராய்ந் துணரிற்
றெறுவதிற் குற்ற மிலார்களு மில்லை
யறவகை யோரா விடக்கு மிசைவோர்
குறைவின்றித் தஞ்சுற்றந் தின்றன ராவர்.

322. உயிர்க ளோம்புமி னூன்விழைந் துண்ணன்மின்
செயிர்க ணீங்குமின் செற்ற மிகந்தொரீஇக்
கதிக ணல்லுருக் கண்டனர் கைதொழு
மதிகள் போல மறுவிலர் தோன்றுவீர்.

323. உலகுடன் விளங்கவுயர் சீர்த்திநிலை கொள்ளி
னிலையில்கதி நான்கினிடை நின்றுதடு மாறும்
அலகிறுய ரஞ்சினுயி ரஞ்சவரும் வஞ்சக்
கொலையொழிமி னென்றுநனி கூறின ரறிந்தார்.

பொய்யாமை.

324. அற்றன் றாதலதுதான் மனஞ்செய்தல்
சொற்றன் மாட்டு நிகழ்த்தல் பிறனேர்த்தல்
மற்றித் தன்மை படுமாயின் மாண்பிலாக்
குற்றப் பொய்யென் றுரைப்பர் குணமிக்கார்.

325. கல்வி யின்மையுங் கைப்பொருள் போகலும்
நல்லில் செல்லல்க ளானவி வுண்மையும்
பொய்யில் பொய்யொடு கூடுதற் காகுதல்
அய்ய மில்லை யதுகடிந் தோம்புமின்.

---

(318)யாப்.வி. 3. (319) பாரதவெண்பா. (320–323) வளையாபதி.(புறத்.)
324. நீலகேசி. மேற். (325) வளையாபதி (புறத்.)

326. பொய்யி னீங்குமின் பொய்யின்மை பூண்டுகொண்
டைய மின்றி யறநெறி யாற்றுமின்
வைகல் வேதனை வந்துற லொன்றின்றிக்
கவ்வை யில்லுல கெய்துதல் கண்டதே.

கள்ளாமை.

327. பீடில் செய்திக ளாற்கள விற்பிறர்
வீடில் பல்பொருள் கொண்ட பயனெனக்
கூடிக் காலொடு கைகளைப் பற்றிவைத்
தோட லின்றி யுலையக் குறைக்குமே.

தவம்

328. வரிக்கடை நெடுங்கண் விளங்க மேதக
மணித்தோடு பெய்து வாண்முகந் திருத்தி
நானிலம் வளைத்த பரவையொடு கெழீஇய
கான்யாற்று வருபுன லாடலுந் தேமலர்
வல்லிப் பந்தர் வண்டுவா ழொருசிறை
நிலமகட் புணருஞ் சேக்கையு மரமுதன்
மெல்லுரி வெண்டுகி லுடையுந் தொல்வகைப்
படையுழா விளையுளி னுணவு மந்திரத்துச்
சுடர்முதற் குலமுறை வளாத்தலும் வரையாது
வருவிருந் தோம்புஞ் செல்வமும் வரைமுதற்
காடுகைக் கொள்ளு முறையுளு மென்றிவ்
வெண்வகை மரபி னிசைந்த வாழ்க்கை
யைம்பொறிச் சேனை காக்கு மாற்றலொடு
வென்றுவிளங்கு தவத்தின ராசிய ரொருவன்
மாக்கட லுடுத்த வரைப்பின்
யார்க்கினி தன்றஃ தறியுநர்ப் பெறினே.

329. [1]மேனமக் கருளும் வியனருங் கலமே
மேலக விசும்பின் விழுவொடு வருமே
மேருவரை யன்ன விழுக்குணத் தவமே
மேவதன் றிறநனி மிக்கதென் மனமே.

(326, 327) வளையாபதி (புறத்.) (328) ஆசிரியமாலை (புறத்). (329) யாப். வி. 52, 95. [1]மேன்மக்கட் கருளும், மேன்மக்க ளுள்ளும்.

330. தவத்தின் மேலுறை தவத்திலை தனக்கல தரிதே
மயக்கு நீக்குதன் மனமொழி மெய்யிற் செறிதல்
உவத்தல் காய்தலொ டிலர்துபல் வுயிர்க் கருளே
நயத்து நீக்குதல் பொருட்டனை யனையது மறிநீ.

331. பொருளொடு போகம் புணர்த லுறினும்
அருளுதல் சான்ற வருந்தவஞ் செய்ம்மின்
இருளில் கதிச்சென் றினியிவண் வாரீர்
தெருள லுறினுந் தெருண்மி னதுவே.

332. தானஞ் செய்திலந் தவமு மன்னதே
கானந் தோய்நில விற்கழி வெய்தின்
நானந் தோய்குழ லமக்குய்த லுண்டோ
மானந்தீர் கொள்கையர் மாற்றம்பொ யல்லவாய்.

பற்றறுத்தல்.

333. உலகே,
முற்கொடுத்தார் பிற்கொளவும்
பிற்கொடுத்தார் முற்கொளவும்
உறுதிவழி யொழுகு மென்ப
அதனால், நற்றிற [1]நாடுத னன்மை
[2]பற்றற யாவையும் பரிவறத் துறந்தே.

334. மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க
லுற்றார்க் குடம்பு மிகையிவை யுள்வழிப்
பற்று வினையாய்ப் பலபல யோனிகள்
அற்று யுழலு மறுத்தற் கரிதே.

335. உற்ற வுதிர மொழிப்பான் கலிங்கத்தை
மற்றது தோய்த்துக் கழுவுத லென்னொக்கும்
பற்றினா லாகிய பாவத்தை மீட்டும்
பற்றொடு நின்று பறைக்குறு மாறே.

336. பருவந்து சாலப் பலர்கொலென் றெண்ணி
யொருவந்த வுள்ளத் துவத்த லொழியின்
வெருவந்த துன்பம் விடுக்குந் திறலோன்
ஒருவ னுலகிற் குளனென்னு மாறே.

(330-332) வளையாபதி (புறத்.). (333) யாப்.வி. 94; தொல். செய். 50, நச்; வீரசோ. யாப். 13 உரை; யாப். கா. ஒழி. 8 மேற். [1]நாடுக. [2]பற்றிய. (334-336) வளையாபதி (புறத்.).

337. வேரிக் கமழ்தா ராசன்விடு கென்ற போதும்
[1]தாரித்த லாகா வகையாற்கொலை சூழ்ந்த [2]பின்னும்
பூரித்தல் வாட லிவற்றாற்பொலி [3]யாது விட்டான்
பாரித்த வெல்லாம் வினையின்பய னென்ன வல்லான்.

338. ஒருமன மாந்தர் மூவகை யுலகின்
இருமனம் பட்டோரற் கதியுழல் வோரே
இருமனம் பட்டு நாற்கதி யுழல்வோர்
ஒருமன மாகி மூன்றுதிரி விலரே
மூன்றுதிரி வறிந்து முதலொன் றறிந்தோர்
ஆன்ற நாற்கதி யிரண்டன்வர விலரே
ஆன்ற நாற்கதி யிரண்டன்வர வுடையோர்
மேற்செயன் மூன்றி னொன்றுணர்ந் தோரே.

339. கற்றுத் துறைபோய காதலற்குக் கற்பினள்
பெற்றுக் கொடுத்த பெருமகன்போல்—மூற்றத்
துறந்தார்க்கு மெய்யுணர்வு தோற்றுவதே யின்பம்
இறந்தவெலாந் துன்பமலா தில்.

ஔவையார் தத்துவங் கூறிய வெண்பா.

340. ஒன்றாகக் காண்பதே காட்சி புலனைந்தும்
[4]வென்றான்றன் வீரமே வீரமாம்—ஒன்றானுஞ்
சாகாமற் கற்பதே கல்வி தனைப்பிறர்
எவாம லுண்பதே யூண்.

341. பெரும்பாவ மறத்துய்த்துப் பெறுதும்யாம் வீடென்னேம்
அரும்பாவ காரிகீ யாவர்வா ய்துகேட்டாய்
வரும்பாவ மெதிர்காத்து மன்னுந்தம் பழவினையும்
ஒருங்காக வுதிர்த்தக்கா லுயிர்த்தூய்மை வீடென்றான்.

பழவினை.

342. உய்த்தன்றி யேர்தந் துழவுழு தாற்றவும்
வித்தின்றிப் பைங்கூழ் விளக்குற வென்னெக்கும்
மெய்த்தவ மில்லான் பொருளொடு போகங்கட்
கெய்த்துழந் தேதா னிடர்ப்படு மாறே.

---

(337) குண்டலகேசி (புறத்.); [1]சோரிக்கலத்தின். [2]போதும். [3]வின்றி நின்றான். வீரசோ. அலங். 9 உரை. (338) யாப். வி. 95. (339) அடையாற்றுப்புத்தகசாலைத் திருக்குறளேட்டிற் கண்ட பாட்டு. (340) தமிழ்நா. 59. [4]வென்றான் றனவீர மேவீரம். (341) நீலகேசி. (342) வளையாபதி (புறத்).